பதிவு எண் 2041 மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா / வெளி நாடு 1½ அணா

ஒரு வருட சந்தா முன் பணம் ...	ரூ 3—0
6 மாத சந்தா ,, ...	ரூ 1-12
வெளிநாட்டிற்கு ,, ...	ரூ 4—0

[வாரப்பதிப்பு]
ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ.	8.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ	2.
தனி விகிதமும் உண்டு.	

மாலை 3 | ஈரோடு, பிரபவ ௵ அற்பிசி ௴ 7௳ (23–10–27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 26.

THE

கும்பகோணம் இண்டஸ்ட்ரியல் கம்பெனி Ltd.

ரைஸ்மில்கள், ஆயில் இஞ்சின்கள், மோட்டார் இஞ்சின்கள் முதலிய இயந்திரங்களுக்கு வேண்டிய சாமான்கள், பேரிங்குகள் முதலானவைகள் இரும்பு, பித்தளை, கன்மேடல், தண்டவாளம், ஒயிட்மெடல் முதலிய லோகங்களில் வார்த்தும், கடைந்தும் ரிப்பேர் செய்தும் கரும்பாலை, ரைஸ்மில் சிலிண்டர், காப்பிங் பிரஸ் முதலிய சாமான்கள் புதியதாகச் செய்தும் கொடுக்கப்படும்.

ஆர்டர்கள் குறித்த காலத்தில் குறைந்த சார்ஜுக்கு செய்து கொடுக்கப்படும்.

P. கோவிந்த பிள்ளை மானேஜிங் டைரெக்டர்.
கும்பகோணம் இண்டஸ்டிரியல் கம்பெனி லிமிடெட், பெரிய தெருவு, கும்பகோணம்.

மகாத்மா காந்தி அவர்கட்கு தமிழ் மாணவசங்கத்தார் விண்ணப்பம்

ஏழைகள் துயர் நீங்க எழுந்த பெருந்தகையே!

தமிழ் நாட்டின்கண் தங்கள்வரவு நல்வரவாருக. தங்கள்நல்வரவினால் எங்கள் துன்பம் நீங்கி இன்புறுவோம் என்னும் நம்பிக்கையுடன் பெருமகிழ் வெய்துகின்றோம்.

இப்பெரிய தமிழ்நாட்டின்கண் பண்டைத் தமிழ் மக்கள், அரசு, மதம், மொழி, சமூகம், தொழில், முதலான எல்லாத்துறைகளிலும் மேன்மையுடன் வாழ்ந்து வந்தார் களென்பது உலகம் அறிந்ததே. இக்காலத்தில் எல்லாத்துறைகளிலும் தமிழ் மக்கள் பின்னடைந்திருப்பதின் காரணம், மேலுலகம், மோட்சம் என்னும் வார்த்தைகளைச்சொல்லி, கடவுள் வேதத்தில் சொன்னதாக, சுருதி ஸ்மிருதி, புராணம், இதிகாசமூலமாயும், (வருணாசிரமதர்மம்) ஜாதி வித்தியாசம் கற்பித்துத் தங்கள் சுயநலத்தைப் பெருக்கிக்கொண்டு அதேநோக்கமாக ஒருபகுதியார் செய்துவந்திருக்கும் சூழ்ச்சியே. அதனால் ஒருபகுதியார் பலதுறைகளிலும் மேன்மையாக வாழவும் மற்றவர்கள் துன்புறவும் ஏதுவாயிருக்கிறது.

இப்பொழுதும் தங்கள் சுயநலத்தைப் பெருக்கிக்கொள்வதற்கு காங்கிரஸையும் கவர்ண்மென்றாரையும், பலவழிகளில் சூழ்ச்சியாகக்கைவசப்படுத்தி வேலைசெய்து வருகிறார்கள்.

இவைகளை அறிந்து தமிழ்மக்களில் அறிவாளிகள் 'தென்னிந்திய நலவுரிமைச்சங்கம்" நிறுவி அதன் மூலமாய் எல்லா மக்களும் முன்னிலைக்குவர முயற்சிசெய்து வருகின்றார்கள்.

எங்கள் பிரியமுள்ள மகாத்மாவே! இதைத்தடுக்கத் தாங்கள் தூய உள்ளமுடையவர்களானதாலும், அவர்களில் சிலர் சொல்லும் வார்த்தைகளை நம்பி நடப்பதாலும் அவர்கள் தங்கள் சுயநலத்தைப் பெருக்கிக்கொள்ள சூழ்ச்சியாக வேலைசெய்து வருகின்றார்கள். அவர்கள்சூழ்ச்சிக்கு அகப்படாதிருக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

கண்ணியமுள்ள பெரியோரே! தமிழ் மக்கள் நன்மைபெற வேண்டுமானால் தமிழ் நாட்டு உண்மைத் தலைவர்களை தருவித்துக் கலந்து பேசி உண்மையறிந்து குறைபாடு நீக்கித்தருமாறு அன்புடன் விரும்புகின்றோம்.

தமிழ் நாட்டு உண்மைத் தலைவர்கள் தங்களைக் கண்டு பேச முடியாதவாறு வேண்டிய தடைகள் சூழ்ச்சியாக நடைபெற்று வருகின்றது.

தங்களைச் சூழ்ந்திருப்பவர்களில் சிலரும் தாங்கள் மதிக்கப்பெற்று வருகிறவர்களில் சிலரும் தமிழ் மக்களால் நன்கு மதிக்கப்பெற்ற உண்மைத் தலைவர்களல்லாததற்கு வருந்துகிறோம்.

உலகம் புகழும் பெரியோரே தாங்கள் பிரசங்கங்களில், வடமொழி கற்றிருக்க வேண்டும் என்றும், பகவத்கீதைபடித்திருந்தால்தான் நல்வாழ்க்கை வாழமுடியுமென்றும் சொல்லிவருவதைப் பத்திரிகைகளில் படித்து வருகின்றோம். தாங்கள் தமிழில் "திருக்குறள்" என்ற நூலையும் (போப் துரையவர்களால் செய்த ஆங்கில மொழிபெயர்ப்பையாவது) ஒப்பிட்டு நோக்கி அதன் உண்மையை பொது மக்கள் உணரும் வண்ணம் பத்திரிகையில் வெளியிடுமாறு பிரியப்படுகிறோம். வேறு பன்னிரண்டு மொழிகளிலும் "திருக்குறள்" மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். தங்கள் அன்பான பதிலை எதிர்பார்க்கும்,

தமிழ்மாணவ சங்கத்தார்.

ஆலவாய்மொழி.

மஹாத்மா மோகன்லால் கரம்சந்த் காந்தியடிகளுக்கு கோவை நகர பரிபாலன சபையார் அளித்த வரவேற்பின் சாரம்.

வருக, வருக. யாங்கள் தங்களை இரண்டாமுறையாக இப்போது வரவேற்று மனமிக மகிழ்கின்றோம். கழிந்த ஆண்டுகளில் இந்நாட்டு மக்கள் வாழ்விலும், அரசியலிலும் மாறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. எனினும் நம் நாட்டின் பால் தங்கட்குள்ள அன்பு மட்டும் திரியாதொருபடித்தாயே இன்றும் உள்ளது.

நூல் நூற்குந் தொழிலை பொது மக்கட்குள் பரவச்செய்யத் தாங்கள் காட்டிவரும் ஊக்கமும் உணர்ச்சியும் பொருவிறந்ததே. எங்கள் ஆளுகையிலுள்ள பள்ளிக்கூடங்களிலும் இந்நூல் நூற்றற்றொழில் பாடமாக வைத்துக் கற்பிக்கப்படுகின்றது. இது தங்களுக்கு மனமகிழ்ச்சியை உண்டுபண்ணும் என்பதிற்றடையில்லை.

குடியால் விளையும் தீமையும், தீண்டாமை என்னும் கொடிய வழக்கமும் விரைவில் தொலைந்துபோம் என்று முன்னரே தங்கள்பாற் கூறியுள்ளோம். தங்கள் முயற்சிக்கேற்ப பலன் விளைந்திலதே என்று தான் யாங்கள் மனம் வருந்துவது.

வருணாசிரம தர்மம் என்பதாக குறித்துத் தங்களுடைய கருத்தைச் சில நாட்களாக வெளியிட்டுக் கொண்டு வருகின்றீர்கள். இந்துக்களாகிய நம்மவர்களது முன்னேற்றத்திற்குப் பெருந்தடையாய் இருப்பது இவ்வருணாசிரமதர்மக் கொடுமையேயாம் என்பது இப்பாற் பெரும்பான்மையோரது துணிபு. பொதுஜன வாழ்க்கையில் உள்ள குறைவுபாடுகளை அறவே ஒழிக்கவேண்டும் என்று நாடெங்கும் கிளர்ச்சி தோன்றியிருக்கும் இக்காலத்தில் இவ்வருணாசிரமதருமக் கொள்கை பயன் தராதே என்று நாங்கள் எண்ணுகின்றோம். உள்ளதை உள்ளவாறே எடுத்துக்கூறுவதில் தங்களுக்குப் பற்றதிகம் என்பதை யுணர்ந்து தான் நாங்கள் இதனைத்தங்கள் பால் துணிந்துகூற முற்பட்டோம். எங்களைத் தாங்கள் பிழைபட மதிக்கமாட்டீர்கள் என்னும் உறுதியும் எங்கட்குண்டு.

தங்கட்கு இறைவன் இன்னருள் சுரப்பதாக. நோயற்ற வாழ்வும், நீடிய ஆயுளும் மேன்மேல் வளர்வதாக. நம் நாட்டினர்க்கும் நன்மை நாடி உழைப்பீராக.

இப்படிக்கு

தங்கள் நாட்டு மக்களாகிய

கோவை நகர பரிபாலன சபையினர்"

அத்திப்பாளயத்தில் ஞானோதயம்,

நிகழும் பிரபவ வருடம் புரட்டாசி திங்களில் இவ்வூர் வாசிகளுக்கு அருணோதயம் போன்று சுயமரியாதை உதயமாயிற்றென்றே சாற்றலாம். இம்மதியில் தான் ஈண்டுள்ளார் மிகுதியும் சிரார்த்த காரியங்களை நடத்துவது வழக்கம். பார்ப்பனர்களுக்கும் மிகுதியும் கொட்டித் தொலைப்பார்கள். ஆனால், இவ்வூர் வாலிபத்தொண்டர்களின் ஊக்கமே ஊக்கம். இவர் தம் அரிய வேலையினால் இவ்வாண்டு நடந்தேறிய பல சிரார்த்தங்கள் பிராமணர்களின்றியே நடைபெற்றன. பழைய பழக்க வழக்கங்களைக் கண்மூடித்தனமாய் கைவிடாது காத்து வந்தபல முதியவர்களும் பிராமணீயமொழிந்த திதிகளையே நடாத்தினர்: ஆகவே இவை மிகுதியும் பாராட்டத்தக்கவை. இவ்வூரில்

பிராமணீயமொழித்து திதி செய்தவர்கள்:—

ஸ்ரீமான்கள் 1 கன்னம்பாளையம கிருஷ்ணசாமி நாயுடு 2 சின்னத்தோட்டம், ற. கோவிந்தசாமி நாயுடு. 3 நம்பூரார், வேங்கிடசாமி நாயுடு, 4 மூலவீட்டு, வெங்கிடசாமி நாயுடு. 5 சி. பொன்னி நாயுடு. 6 ரா. கிருஷ்ணம நாயுடு 7 கோ. ற. கோபால்சாமி நாயுடு. 8 வெ. அயோத்தி நாயுடு. 9 ஆவாம்பாளையம் சின்னம நாயுடு. 10 நீர்குண்டி கிருஷ்ணம நாயுடு. 11 பெரியமணியம் கிருஷ்ணம நாயுடு. 12 பெ. அண்ணம நாயுடு. இன்னும் பலரும் செய்துள்ளார்கள் என்று அத்திபாளையம், ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் வித்தியாசாலை, காரியதரிசி, வெ. திருவெங்கிடசாமி தெரிவிக்கிறார்.

"தமிழன்"

(ஓர் தமிழ் வாரப்பத்திரிகை.)

தாழ்த்தப்பட்டவர்

சமத்துவம், சுதந்திரம், முன்னேற்றம்,

இவைகளை அடைய வேண்டுமானால் ஒவ்வொரு கிராமத்திலுள்ள தாழ்த்தப்பட்டவர்களும் "தமிழனை" வாங்கவேண்டும். தாழ்த்தப்பட்டவர்களாகும் ஆதிதிராவிடர்களின் குறைகளை இடைவிடாமல் கவர்ன்மெண்டாருக்கு விளக்கிக்கூறுவதும் இப்பத்திரிகையேயாகும்.

வருட சந்தா உள்நாட்டுக்கு ரூபாய் 3

வெளிநாட்டுக்கு ரூ. 4.

மானேஜர் "தமிழன்" ஆபீஸ்,

ஆண்டர்சன் பேட்டை, கே. ஜி. எப்.

அவியல்.

13-ம் பாகம்.

கோவில்

கைவல்யசாமியார் எழுதுவது

வசந்தன்,—எனது சந்திரா! பதிமூன்றாவது என் வெள்ளைக்காரர்களுக்கு திருப்தியில்லாதது. அதுபோல நமது அவியலுக்கும் பதிமூன்றாம் பாகம் சமாதானக் குறைவானதாகவே இருக்கிறது. ஏனெனில் நமது சரீரமும் அமைந்திருக்கும் இயற்கை முறையை யொட்டி எவ்வகையாலோ அகண்ட தன்மையின் பாவனை நம்மனதில் உண்டாகும் பொருட்டு தமக்குள்ள பரிசுத்தம், நிர்மலத்வம், சத்யம், சர்வவியாபகத்வம் முதலிய கருத்துக்களை பற்பல விக்கிரஹங்களாலும் ரூப விசேஷங்களாலும் பாவனை செய்துகொள்ள கோவில்களேற்படுத்தினார்களாம். நம் பெரியவர்களாலும் சமயாச்சாரிகளாலும் ஒத்துக்கொள்ளப்பட்ட இக்கோவில்களில் கடவுளைப்பிரத்தியட்சமாகக்கண்டு தெரிசித்ததாகவும் சரித்திரங்களினால் தெரிகிறது. இவ்வளவு வைபவத்தோடுகூடின நம் கோவில்களில்; கடவுள் விவசாரியின் விடுதியில் எவ்வளவு இருப்பாரோ அவ்வளவுதானிருப்பாரென்றும், கோவிலுக்கும் விவசார விடுதிக்கும் வித்தியாசமில்லை என்றும் மகாத்மா சொன்னதாக பேப்பர்களிலும் எழுதப்பட்டு, அதற்கு மறுப்பும் வந்து, மறுப்பையும் சில முக்கிய பேப்பர்கள் தலையங்கத்திலேயே கண்டித்துமிருக்கிறது என்பதும் உனக்குத்தெரியும். இதைப்பற்றி உன் அபிப்பிராயமென்ன?

சந்திரன்— வசந்தா! இதற்கெல்லாம் சமாதானம் நான் சொல்லவேண்டுமானால் உன் மனதை விரிந்த சிந்தனா சக்திக்கு தயார் செய்துகொண்டு பக்தியில் விசாரித்துப் பார்த்தாயானால் என்னுடைய சமாதானத்தின் உண்மை புலப்படும். எத்தனை படித்திருந்தாலும் மூட நம்பிக்கையின் பழக்கத்தில் பழகினவர்களின் சிந்தனா சக்திகெட்டுப்போனமையால் உண்மை அவர்கள் மனதிற்குப் பட்டாலும் பழைய பழக்கத்திலேயே ஊடாடிக்கொண்டு உண்மைக்கு அவர்களின் அறிவு செல்லுவதில்லை. தமக்கு அபிமதமான கோவில் முதலிய விஷயங்களிலே தம் வாழ்நாளை எல்லாம் விநியோகித்து கடவுளுக்கும் தங்களுக்கும் மாற்று வியாபாரம் செய்துகொள்ளுகிறார்களே ஒழிய அதற்குமேல் ஒருபோதும் அபிவிர்த்தியடைகிறார்களில்லை. ஏனெனில் அவர்களுக்கு புராணக்கதைகளும் குருக்கள் கட்டுப்பாடும் மதமாக முன் நிற்கிறது. குருக்கள் பேச்சைக்கேட்டு சுவாமியைத் திருப்தி செய்ய காணிக்கை, பிரார்த்தனை, அபிஷேகம், ஆராதனை முதலியவைகளும், குருக்களுக்கு காணிக்கை, பாத பூசை, குருக்கள் பிழைப்பிற்கு பக்திமான்களின் பக்தியின் பற்றுதலுக்கும் பணத்திற்கும் ஏற்றாப்போல சமயத்திற்குத் தகுந்தவாறு அவனால் ஏற்படும் கர்மங்களை செய்வதே நம்மவர்கள் கடவுள் பக்தியாகவிருக்கிறது மூன்று ரூபாய் வட்டி வாங்கி மூவாயிரம் குடும்பத்தைக் கெடுத்து சுவாமிக்கு முத்தாரம் வாங்கிப்போட்டால் அவனுக்கு முக்தி வந்து விடுவதாக உபதேசிக்கப்படுகிறது. தேவதாவிக்கிரகங்களும், ஆலயங்களும், வேத சாஸ்திரங்களும், மனிதர்களின் ஆரம்ப ஞானதசையில் ஊன்றுகோல்போல இருந்து உதவும் சாதனங்கள் மாத்திரமென்றும், இந்துமதத்தின் உத்தமநிலை அவையல்லவென்றும், இந்துமதக்கொள்கையின் படிக்கு ஒவ்வொருவனும் படிப்படியாய் மேல்நோக்கி உயர் நிலையை நாடிச்செல்லவேண்டியவனென்றும், இந்துசாஸ்திரத்தின் கருத்தாகவிருக்கிறது. இந்துசாஸ்திர உயர்ந்த தத்துவமென்று சொல்லப்படுபவை ஜன சமூகங்களுக்கு உபதேசிக்கப்படவில்லை. பல நூற்றாண்டுகளாக நீசத்தன்மையான கோட்பாடுகள் ஜனங்களுக்குப் புகட்டப்பட்டே வந்திருக்கிறது. இன்னும் அதுவே உபதேசமாகிக்கொண்டுவருகிறது. பல நூற்றாண்டுகளாக கடவுள் பேரை முன்னால் நிறுத்தி சாஸ்திரமென்னும் கொடுமையால் நம்மவர்கள் பயமுறுத்தப்பட்டு வந்து மத விஷயத்தில் மிருகப்பிராயராய் விட்டார்கள். நம்மில் படித்தவர்களென்று நாம் நினைப்பவர்கள்கூட சிந்தனா சக்தியில் அவர்கள் புத்தி பாழடைந்தேயிருக்கிறது. குருட்டு நம்பிக்கையின் காரணமே அவர்களின் பேச்சாகவுமிருக்கிறது.

அந்தந்த சமயங்களில் ஏற்படும் கால தேச வர்த்தமான பேதங்களை யனுசரித்து ஜனங்களுக்கு விதிவிலக்கு வடிவமான கர்மங்களை உணர்த்தவேண்டிய அம்சத்தில் ஜனங்களைத் தொன்று தொட்டு வரும் அறநெறியின் வழியே நடத்த வேண்டியிருந்ததால் அதற்காகவே மகான்களும் ஆசாரிகளும் முனிவர்களும் அவதரித்து கோவில் முதலியவைகளை ஏற்படுத்தினார்கள் என்பதை ஒத்துக்கொள்வோம். சாந்தகுணம், சாதுத்தன்மை, க்ஷமை. சமரசம், அனுதாபம், சகோதர பாவம், ஆகிய இவற்றை ஆண், பெண், சிறுவர், கற்றோர், கல்லாதவர், எச்சாதியில் எவ்வருணத்தில் எக்கொள்கையில் சேர்ந்தவரேயாயினும் எல்லாரும் கற்றுணர்ந்தொழுகுதலே உத்தம தர்மமென்பதை கடவுளைக் காட்டி தெரிந்துகொள்ள கோவில் ஒரு பள்ளிக்கூடமென்பதையும் ஒத்துக் கொள்ளுவோம். இந்தவிதமான தன்மைகளையும் ஒழுக்கங்களையும் அடைவதற்கு இந்த கோவில்களின் ஏற்பாடுகளும் நடவடிக்கைகளும் இருக்கிறதா என்பதைக் கவனித்துப் பாருங்கள். பார்ப்பீரானால் கோவிலில் அருளில்லையென்றும், அதனால் எந்தவித சன்மார்க்கமும் அடைய முடியாதென்றும் உணர்வீர்கள். கோவில்களிலுள்ள தேரும் திருநாளும் விவசார விர்த்திக்கு அனுசரணையாகவே நடந்து வருகிறது. பெரிய கோவில்களான திவ்விய ஸ்தலமென்று நாம் சொல்லுமிடங்களே விவசாரத்தில் சேர் போனவைகளாகவுமிருக்கின்றன. நமது சாமிகளே தம் அம்மனோடு கூடியிருக்காமல் எப்பொழுதும் வைப்பாட்டியானபிரியாவிடை அம்மனோடு இருப்பதாகவே கோவிலில் எல்லா நடவடிக்கைகளும் நடத்தப்படுகிறது. வைப்பாட்டி வீட்டிற்குப் போய்வந்த சுவாமியை சுவாமியின் பெண்ஜாதியான அம்மன் உள்விடாமல் வாசற்கதவை தாளிட்டுக்கொண்டதாகவும், சுவாமி பல பெண்களோடு கூடி கோலடித்தாரென்றும், ஒய்யார நடை நடந்தாரென்றும், ரவுக்கையைக் கிழித்தாரென்றும், தேவடியாள் வீட்டுக்குத் தூது போனாரென்றும், தேவடியாள் வீட்டுக்குப் போகப் பொன் கொடுத்தாரென்றும், இன்னும் இப்படிப்பட்ட விஷயமான திருவிழாக்கள் கோவில்களில் நடத்தப்படுகின்றன. இதற்கெல்லாம் தத்துவார்த்தம் இருக்கிறதாம்! தெம்மாங்கு தில்லானாப்பாட்டுக்கும் வேதாந்த அர்த்தம் செய்வதற்கு என்ன கஷ்டம். பெண்ணை சுவாமியாகவும் பெண்ணின் சுகத்தை மோக்ஷமென்றும் அர்த்தம் பண்ணினால் தத்துவார்த்தம் வந்து விடுகிறதாம். எதற்கும் தத்துவார்த்தம் கண்டு பிடிக்க ஏற்பட்டு விட்டதினால் தான் நமக்கு ஒன்றையும் சரியாய் தெரிந்துகொள்ளும் சக்தி உண்டாகவில்லை. இதையெல்லாம் ஆலோசித்துத்தான் மகாத்மா காந்தி கோவிலில் தெய்வமில்லை என்றார். அறிவில்லாதவர்கள் மூடர்கள். இவர்கள் அறிவையடைந்து மூடத்தன்மையை விடுவதற்காக ஏற்படுத்தினவைகளே கோவில் என்று நாமே சொல்லுகிறோம். அதிலுயர்ந்தவனென்றும், ஆத்மஸ்வரூபமே கடவுள்தன்மை என்கிற மந்திரம் தெரிந்தவர்களென்றும், கடவுளின் முகத்திலிருந்து பிறந்தவர்களென்றும், பிறக்கையிலேயே ஞானத்துடன் பிறந்தவர்களென்றும் பெருமை பேசிக்கொள்ளுகிறீர்கள். கோவில் தேவையில்லாதவர்கள், கோவிலுக்குள்ளிருந்துகொண்டு, கோவில் யாருக்காக ஏற்பட்டதோ, யாருக்குத்தேவையோ அவர்களை உள்ளேவிடாமல் இருப்பதற்கு, அவர்கள் எப்பொழுதும் அடிமை நிலையிலிருக்கவேண்டும், அங்குள்ள முழுதெல்லாம் நாமே அனுபவிக்கவேண்டும், கோவில் இருந்தால் தான் ஏமாற்றிப் பணம் பறிக்க சாதகமாகும், என்பதைத்தவிர அவர்களை உள்ளே விடக்கூடாதென்பதற்கு வேறு என்ன காரணம். பாமர ஜனங்களின் பணத்திற்கு கோவில் சுடுகாடாகவும் அதைச் சேர்ந்தவர்கள் வயிறு இடுகாடாகவுமிருக்கிறதே ஒழிய கோவில் எந்த நன்னடக்கையைக் கற்பிக்கிறது; இதைப்பற்றி இன்னொரு தரம் விரித்துச் சொல்லுகிறேன். கோவிலும் விவசார விடுதியும் ஒன்று என்று மகாத்மா சொன்னதைக் கவனிப்போம்.

சுவாமி என்றாலே எல்லாரும் பயப்படக்கூடிய ஒரு சாதனம். அது இருக்கும் இடம் விவசார விடுதிக்குசமமென்று சொல்லுவதை கேட்டால் எந்தபக்தனுக்குத்தான் மனம் சகிக்கும். கடவுள் எங்குமிருக்கிறார். விவசாரவிடுதியிலுமிருக்கிறார், விவசார விடுதியில் அவர் சைதன்னிய மிருக்காது. விவசார விடுதியில் நடக்கும் நித்தியகர்மானுஷ்டான காரியாதிகளுக்கு என்னென்ன ஆசார அனுஷ்டான உத்தியோகசம்பிரதாயங்கள் நடக்கவேண்டுமோ அவையனைத்தும் கோவில்களில் நடப்பதால் இங்கும் கடவுள் சைதன்னிய மிருக்க ஞாயமில்லை என்று சொல்லப்படுகிறதே தவிர கடவுள் விவசாரியாய் போய விட்டாரென்றும் கடவுளை குற்றம் சொல்லுவதாகவும் பக்தகோடிகள் பயப்படவேண்டியதில்லை. படித்தவர் கூட சிலர் பயந்து கடவுளை குற்றம் சொல்லிவிட்டார்களே என்று உயிரைவிடப் புறப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அறிவற்றதன்மையும் ஆஷாடபூதித்தனமும் அறிந்தவர்கள் பயப்படமாட்டார்கள். உள்ள நாளெல்லாம், கொடுங்குற்றவாளியைத் தப்பிக்கக் கண்டு பிடிக்கும் புது புது முயற்சியிலேயே தொழில்செய்யும் வக்கீலுக்கும், தன்ஜாதியான் வீட்டில்கூட சாப்பிடாமல் சைவத்திற்கு தோஷம் வந்து விடும் தானே தனியாகவிருந்து யாருக்கும் தெரியாமல் வயிறு நிறைய தின்றால் தான் தீட்சையின் கர்மம் நிறைவேறிற்று என்று நினைக்கும் சிவபண்டிதர்களுக்கும், கடவுள்பேரில் உள்ள பக்தியும் அவர் ஏற்றுக்கொள்ளும் பக்திடம் எவ்வளவு என்பதை நீயே அறிந்துகொள். விவசார விடுதியில் கள், களவு, சூது, வஞ்சனை, பொய், மோசடி இவையனைத்தும் இருப்பதாக எல்லாரும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். கோவிலிலும் கள், களவு, சூது, வஞ்சனை, மோசடி, பொய் இவைகள் நிறைந்து கிடைக்கிற தென்பதை ருஜூப்படுத்தினால் இரண்டிடத்திலும் அருள் இருக்காதென்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். கோவிலுக்கும் கள்ளுக்கடைக்கும் கள்ளைப்பற்றின வரையிலும் மொத்தப்படி சில்லறை என்னும் வியாபாரத்தில் வித்தியாசமே ஒழிய கள்ளைப்பற்றின வியாபாரத்தில் வித்தியாசமில்லை. கோவிலிலிருந்து கள் குடம் குடமாக உற்பத்தி செய்யப்பட்டு கடைக்கு விற்கப்படுகிறது. கள்ளை கடைக்காரன் சொப்பு சொப்பாக ஊற்றி விற்கிறான். கள்ளுக்கடைக்கு சொந்தக்காரன் ராஜா கடையை நடத்தும் ஏலக்காரன் பேரில் வரவு செலவுக் கணக்கு. கோவில் தென்னைமரத்திற்கு சொந்தக்காரன் சுவாமி கள்ளு மரத்தைப் பற்றின

(இதன் தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க)

சமய சீர்திருத்தம்.

சென்னை பச்சையப்பன் மண்டபத்தில் உயர்திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களின் சொற்பெருக்கு.

நேற்று முன்தினம் மாலை 4 மணிக்கு சென்னை சித்தாந்த பிரகாச சபையின் ஆதரவில் சென்னைப் பச்சையப்பன் மண்டபத்தில் கூடிய கூட்டத்தில் வைக்கம் வீரரும்சுயமரியாதை சூரியருமான உயர் திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்கள் சுமார் 2-30 மணிக்கு மேல் 'சமய சீர்திருத்தம்' என்பது பற்றி ஒரு இனிய சொற்பெருக்கு நிகழ்த்தினர். அதன் சுருக்கம் பின்வருமாறு:—

சகோதரர்களே!

'சமயம் சீர்திருத்தம்' என்பதுபற்றி பேசுவது என்பது என்னைப்போன்ற ஒருவருக்கு இலேசான காரியமல்ல. அதற்குத் தக்க ஆராய்ச்சி வேண்டும். சீர்திருத்தத்தைப் பற்றி பேசவும் எனக்குப் போதுமான திறமையில்லை. நான் சமய ஆராய்ச்சி செய்யவில்லை. கடந்த ஆறேழாண்டுகளாக அரசியலில் மகாத்மா காந்தியின் தலைமையின்கீழ் நடைபெற்றுவந்த காங்கிரசில் நான் உழைத்துவந்தது அன்பர் பலர் அறிவர். அரசியலின்மூலம் நாட்டின் சீர்திருத்தத்திற்கு அரும்பாடுபட்டும் யாதொரு பலனும் அடைய இயலாமல் போனதாலும்,அதற்குக் காரணம் சமய சம்பந்தமான கொள்கைகளே தடையென்றுணர்ந்ததாலும், அக்குறைகளை நீக்க உழைப்பதுதான் அவசியமெனத் தோன்றிய பின்னர் அவ்வழியில் உழைத்துப் பார்க்கலாமென ஏற்பட்டேன். சமயத்தின் பெயரால உண்டாகும் நஷ்ட கஷ்டங்களையும்,விடுதலைக்கு விரோதமானவைகளையும்மக்கள் சுயமரியாதையற்ற வாழ்க்கையில் துன்புறுவதையும் ஒழிக்கவே முதலில் பாடுபடவேண்டும் அப்பொழுதுதான் நாம் விடுதலையடைய முடியும். நம் நாடு விடுதலையடைய முடியாததற்கும் சுயமரியாதையற்ற தன்மையில் வாழ்வதற்கும் நமது சமயக்கொள்கைகள்தான் இடையூறாக இருக்கின்றன. நான் இப்பொழுது பேசினால் கேட்போர்களில் சிலருக்கு மனவருத்தமாய்த் தான் தோன்றும். ஏனெனில் நம்மக்களுக்கு சமயப்பற்று என்கிற மூடநம்பிக்கையை சுயநலக்காரர்கள் அதிகமாய் ஊட்டிவிட்டார்கள். அது நமது இரத்தத்திலும் நன்றாய்க் கலந்துவிட்டது. சுலபமாய், கேட்போருக்கு சமாதானம் சொல்லி சரிப்படுத்த முடியாத அளவு பதிந்திருக்கின்றது. நாட்டின் சீர்திருத்தம் என்ற தலைப்பின்கீழ் நான் பேசும் விஷயங்களை உறுதியாய் நம்புகிறேன். நம் நாட்டிற்கு என்றுமே விடுதலையில்லாத வழியில் காரியங்கள் சமயத்தின்பேரால் நடைபெற்றுவருவதைத் தெரிவித்தால் சிலர் மனம் வருந்தும். அதற்குப் பயந்து வெளிப் படுத்தாமல் போனால் நான் சுயநலம் கருதுபவனாவேன்; அல்லது பயங்காளித்தனம் கொண்டவனாவேன். பகுத்தறிவைக்கொண்டு பொதுநிலையில் இருந்து ஆராய்ச்சி செய்தால் நான் சொல்லுவதில் குற்றம் சொல்ல அவசியமிராது. சமய விஷயம் பேசும் பொழுது அதன் பயனாய் அரசியலிலும் ஏற்பட்ட குற்றங்குறைகளை கூறவேண்டியிருக்கின்றது. அரசியலில் நான் தீவிர வேலைசெய்தேன் என்பது இங்குள்ள பலர் அறிவர் பின்பு அவ்வனுபவத்தைக்கொண்டு அந்நிலை விடுதலை அடைய பாடுபடும் வழியெனக்கருதியே அதைவிட்டு வெளியேறினேனேயன்றி, மற்றபடி யாராலாவது வெளியேற்றப்பட்டோ, அல்லது சிறு அபிப்பிராய பேதம் ஏற்பட்டோ வெளிவந்தவனல்ல. நான் சாதாரண நிலையிலிருந்து வெளிவரவில்லை. அரசியலில் ஒரு பொறுப்புள்ள பதவியிலும் உத்தியோகத்திலுமிருந்தே நான் வெளிவந்தேன். நமது நாட்டுக்கு இவ்வரசியல் இயக்கமூலம் ஒன்றும் ஆகாது எனக் கருதியே வெளி வந்தேன். காஞ்சீபுரம் மகாநாட்டில்தான் இவ்வுணர்ச்சிகள் பலப்பட்டு வெளி வந்தேன். அரசியலில் தமிழ்நாடு காங்கிரசு தலைவராகவும் தமிழ்நாட்டுக் காரியதரிசியாகவும் பல ஆண்டுகள் இருந்தேன். அப்பொழுதுதான் நான் ஆற்றும் தொண்டு வீண் தொண்டெனவும், நமது எதிரிகளுக்கு அனுகூலமாய் இருந்துகொண்டு நாட்டையும் சமூகத்தையும் பாழாக்குகின்றோம் எனவும் கருதி நான் விலகினேன்.

மத சம்பந்தமாகவும் எனது நிலையை நீங்கள் அறிய வேண்டுமானால் 1904 ஆம் வருடம் முதல் 1927 ஆம் வருடம் ஜுன் மாதம் வரையில் சுமார் 23 வருடகாலமாக எனது தாலூகாவாகிய ஈரோடு சர்க்கில் தேவஸ்தான கமிட்டிக்கு காரியதரிசியாகவும் தலைவனாகவுமிருந்தேன். இந்துமத பரிபாலன போர்டாரும் எனது நிர்வாகத்தைப்பற்றி பெருமை பாராட்டியே பேசியும் எழுதியும் வந்திருக்கிறார்கள். தற்பொழுது உண்டாகிய புதிய போர்டார் புதிய கமிட்டியை நியமிக்கவே, அவர்கள் நான்கு தாலூகாவுக்கு ஒரு கமிட்டியாக ஏற்படுத்தி அதில் என்னையும் தேவஸ்தானக்கமிட்டி அங்கத்தினராக நியமித்திருக்கிறார்கள். தற்கால மந்திரி சபைக்கும் எனக்குமுள்ள சம்மந்தம் நீங்கள் அறிந்த விடயமே. அவர்கள் செய்யும் குற்றங்களைப் பளிங்கு போல் எடுத்துக்காட்டி வருகின்றவர்களில் நான் ஒருவன். அப்படி இருந்தும் அவர்கள் என்னை நியமித்தார்கள். என்னைப்பற்றிய பிராதுகள் பல அவர்களுக்குப் பார்ப்பனர்கள் அனுப்பி என்னை நியமிக்கக்கூடாது என்று கேட்டுக்கொண்டார்கள். அவைகளில் முதல் பிராது நான் குற்றவாளி என்றும்,சிறைசென்றவன் என்றும், இரண்டு முறை சிறையில் அடைக்கப்பட்டவன் என்றும், எழுதி அனுப்பினார்கள். அந்தப் பிராது எனக்கே என்பார்வைக்கு வந்தது. நான் அவர்கள் எழுதியதெல்லாம் உண்மைதான். ஆனால் மூன்று தடவை சிறை சென்றேன் என்பதற்கு பதிலாக இரண்டு தடவை என்று எழுதியது தான் பிழை என்று திருத்தி அனுப்பி விட்டேன். மறுபடியும் பல பார்ப்பனரல்லாதாரிடமும் பல பார்ப்பனர்களிடத்திலும் கையொப்பம் வாங்கி 'இவன் மதத்தை நிந்திக்கிறான், எப்பொழுதும் பார்ப்பனரையே வைகிறான். வேண்டுமானால் சி. ஐ. டி. ரிப்போர்டர்களின் ரிப்போர்டுகளைப் பாருங்கள்' என்று ஒரு விண்ணப்பம் சர்க்காருக்கு அனுப்பினார்கள். அதைப்பற்றியும் சர்க்கார் என்னைக் கேட்டார்கள். நான் அதற்குப் பதில் எழுதியதில், நான் ஒரு வகுப்பாரை மாத்திரம் வையவில்லை. எல்லாரையும் வைகிறேன். என் தொண்டுக்கு எப்பேர்ப்பட்ட கூட்டத்தார் கொள்கை எதிரிடையாகயிருக்கிறதோ அவர்களைக் கண்டியாமலிருக்க என்னால் முடியாதென்றும் எல்லாருக்கும் சம உரிமை வழங்கப்படுவதற்காக உழைக்கிறேனே யல்லாமல் வேறு அல்லவென்றும் அறிவித்தேன். மறுபடியும் என்னை நியமித்தார்கள். சென்னைக்கு வருவதாலும் மற்றும் வெளியூர்களுக்குச் செல்லவேண்டிய அவசியமேற்பட்டதனாலும், எனது தலைமைப் பதவியைப் பொறுப்புவாய்ந்த ஒருவருக்குக் கொடுத்து நான் இன்று வரையில் உபதலைவராக யிருந்து வருகிறேன். என்னை சிலர், நான் செய்யும் உபந்நியாசங்களைக் கேட்டு 'நாஸ்திகன்' 'மதத்தை நிந்திக்கிறவன்' என்றும் 'சுயராஜ்ய விரோதி' என்றும் சர்க்கார் நேசன் என்றும் குறைகூறி வருவார்கள். 'சர்க்காருக்கு வேண்டியவன் என்பதற்கு அறிகுறி ஒன்றும் எனக்குப் புலப்படவில்லை, சர்க்கார் அன்று என்னை எப்படி பாவித்து நடத்தி வந்தார்களோ அதுபோலவே இன்றும் என்னை நடத்தி வருகிறார்கள். இன்னும் எனக்குப் பின்னால் போலீஸ் காரர்கள் தொடர்ந்துகொண்டு தான் இருக்கிறார்கள்.

நான் உங்கள் முன்னிலையில் சொல்ல வந்தது சமய சீர்திருத்தம். நான் சொல்லுவதை யெல்லாம் ஒப்புக்கொண்டுதான் தீரவேண்டுமென்றும், அதன்படி நடக்காவிட்டால் பாவம் வரும் என்றும் சொல்லி பார்ப்பனர்களைப்போல் நான் உங்களை ஏமாற்ற வரவில்லை. நான்சொல்வதைப் பொறுமையுடன் கேட்டு பிறகு உங்கள் பிரியம்போல் நடவுங்கள் என்று சொல்லிய பின்பே நான் இன்று பேச எடுத்துக்கொண்ட சமய சீர்திருத்தம் என்னும் விஷயத்தைப்பற்றி பேச ஆரம்பிக்கிறேன்.

சமய சீர்திருத்தம்.

சமயம் என்பதும்,மதம் என்பதும் ஒன்றுதான், சமய சீர்திருத்தம் என்றால் மதத்தை சீர்திருத்த வேண்டுமென்பது தான் பொருள். சமயம் அல்லது மதம் என்றால் பொருள் என்ன? மதம் வேண்டுமென்கிற உணர்ச்சி எப்போது உண்டாயிற்று? மதம் எதற்காக வேண்டும்? என்பவைகளை உணரவேண்டும். மதம் என்பது என் சிற்றறிவுக்கு எட்டியவரையில் எந்த முறையில் ஏற்பட்டிருக்கவேண்டுமென்றால் மக்கள் கூடி கூட்டமாக வசிக்க ஏற்பட்டவுடன் அவர்களுடைய நித்திய வாழ்க்கையில் ஒரு கட்டுப்பாடு இருக்கவும் மற்றவர்களுக்கு மனிதன் துன்புறுத்தாமல் உபயோகப்படுகின்ற முறையில்தான் ஏற்படுத்தப்பட்டது. அந்த முறையில் ஏற்படுத்தின காலத்தில் அக்கால மக்களுக்குள்ள அறிவு, ஆற்றல், நிலைமை, சீதோஷ்ணஸ்திதி முதலியவைகளுக்கு ஏற்றவாறு ஒரு சிறு கொள்கைகளை அமைத்து உண்டாக்கி இருக்கவேண்டும்; நாளடைவில் அது வளர்ந்துகொண்டும் தனி மனிதன் பெருமைக்கும் அவன் ஆசைக்கும் பிறகு அரசியலுக்கும் ஆக சிறிது சிறிதாய் மாறி இப்போதுள்ளவைகள்போல் சமயம் ஏற்பட்டிருத்தல் வேண்டும். நமது நாட்டில் ஆதியில் சமயம் ஏற்பட்ட காலத்தில் சமயத்திற்கும் அரசியலுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. அக்காலத்தில் அரசியலில் நம்மக்களுக்குள்ள உணர்ச்சியில்லை. உணர்ச்சி உண்டாகவேண்டிய அவசியமுமில்லை. ஏன்? பதினாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்புள்ள சரித்திரங்களை ஆராயுங்கள். அக்காலத்தில் வேளாண்மை மிகுதியுமிருந்தது. ஒவ்வொருவனுக்கும் வேண்டிய பொருள்கள் அனைத்தும் இருந்துவந்ததோடு மிகுதியும் பட்டது.

நெல் வைத்திருப்பவன் பருத்தி வைத்திருப்பவனுக்கு நெல்லைக் கொடுத்து பருத்தியோ அல்லது துணியோ பெறுவான். இதுபோல் எல்லா சௌகரியமும் உண்டு. இதுதான் பண்டமாற்றுதல் என்ற பெயர். நம்மவர்கள் ஓய்வு நேரங்களில் சிந்தித்ததிலேயே சில சட்டங்களும் மற்ற சமய கட்டுப்பாடுகளும் ஏற்பட்டது. ஆனால் இதுதான் பின்னால் நம் நாட்டிற்கு வந்த பார்ப்பனர்கள் கவலையற்று இருந்த நம்மக்களை ஏமாற்றி தங்கள் நன்மைக்குத் தகுந்தபடி திருப்பி தங்களுக்கு இவைகள் எல்லாவற்றையும் அடிமையாக்கிக் கொண்டு இவைகளுக்குத் தாங்களே கர்த்தாவாகவும் எஜமானர்களாகவும் ஆகிவிட்டார்கள். கொள்கையென்றும் ஏற்படவில்லை. அவரவர் இஷ்டப்போல் அனுபவித்தார்கள். மகமதிய மதமும் கிருஸ்துவ மதமும் வெறும் கடவுளை வணங்குதல் என்பதோடல்லாமல் வரவர அரசியல் கருத்தைக் கொண்டும் தங்கள் தங்கள் மதத்தைபொறுத்த வேலைசெய்தும் செய்துகொண்டும் வருகிறார்கள்.

ஆனால் நாம் கட்டுப்பட்டுக்கிடக்கும் சமயத்தையோ அந்த காலத்திலிருந்த நிலையிலே இருக்க வேண்டுமேயல்லாமல் ஒரு சிறிதும் மாற்றக்கூடாது என்கிறார்கள். இதை நம்புகிறவர்களும் பிடிவாதக்காரராய் இருக்கிறார்கள். இங்குதான் அபிப்பிராயபேதம் ஏற்படுகிறது. நமக்கு அவசியமானபடி நாம் மாற்றிக்கொள்ளல் வேண்டும். அப்படி மாற்றுவதில் அடியோடு மாறவும் ஏற்படலாம். நம் மதம் கட்டுப்பாடு உடையதல்ல ஒரு குறிப்புக்கு ஒத்ததல்ல. இக்காரணமே நம்மை அடிமையாக்கிற்று. ஆனால் இதனை நம்மக்கள் அறியார். இப்படியிருப்பதால் நாம் எப்பொழுது முன்னேற்றமடைய முடியும்? நாம் எப்படி அடிமைவாழ்வினின்று நீங்கி சுயமரியாதையுடன்வாழ முடியும் ஆகையால்ஒருநாடோ,ஒருதேசமோ சுயமரியாதையுடன் வாழ தடுக்கின்றவர்களை அழிக்க உடனே முற்படல் வேண்டும். பிடிவாதக்குணத்தை விட்டொழித்து மக்கள் நிலைமைக்கும் அறிவுக்கும் ஏற்றவாறு காரியங்களை முடித்து தடைகளை அகற்றி சுயமரியாதை அடைந்து விடுதலை பெறவேண்டும்.

இந்து மதம்.

சிலர் தங்களை இந்து என்கிறார்கள். ஆனால் அவர்களை இந்து என்றால் என்ன என்றால் 100-க்கு 90 பேருக்குத் தெரியாமலிருக்கிறது. அப்படியிருந்தும் நம் மக்கள் மூட நம்பிக்கையால் மதத்தின் பேரால் கொண்டுள்ள அன்பு செப்பத்தரமல்ல. மற்ற மதக்காரர்கள் அவைகளை அறிவது போல் நம் மதம் நாம் அறியக்கூடாதவர்களாயிருக்கிறோம். மகம்மதியர்களில் 100-க்கு 90 பேர் தங்கள் மதத்தைப் பற்றி தெரிந்தவர்களாயிருக்கிறார்கள். நம்மக்களை யாராவது உங்கள் மதம் என்ன? யார் ஏற்படுத்தியது? அதன் காலமென்ன? இதுபோன்ற வினாவெழுப்பினால் பதில் சொல்லுவாரில்லை. மகம்மதியரையோ அல்லது கிருஸ்தவர்களையோ அல்லது புத்தர்களையோ வேறுயாரையோ கேட்டால் உடனே பதில் சொல்லத் தயாராயிருக்கிறார்கள். இந்து மதத்தில் இவர்கள் கற்பிக்கப்படும் வயது இலாசனதல்ல. அதாவது கடையிலுள்ள காகிதங்களையெல்லாம் வாங்கி அதில் ஒன்று போட்டு அதன் பின் எத்தனை முட்டை வடிவம் போட்டாலும் அதற்கு மேல் போகுயேயன்றி குறையாது. தலைவர் யார் என்றால் சொல்லும் நிலைமையில்லை. கடவுளால் ஏற்பட்டது என்பர் சிலர். ஆதாரம் என்னவென்றால் வேதம் என்பார்கள். அது என்ன சொல்லுகிறது என்றால் நீ பார்க்கக்கூடாது நீ கேட்கக்கூடாது, படிக்கக்கூடாது என்பார்கள். அதைக் கடவுள் எழுதியிருப்பார் என்று யாராவது நம்பமுடியுமா? என்று பாருங்கள். ஒருபொழுதும் முடியாது. ஏனெனில் கடவுள் சொன்ன வேதமானால் உலகத்தார் எல்லோரும் ஒப்புக்கொள்ளவேண்டும். யாரும் பார்க்க வேண்டும். அப்படியிருக்க நாம் எப்படி அந்த வேதத்தை நம்புவது, அதன்படி நடப்பது? மற்ற மதக்காரர்கள் தங்கள் வேதநூல்களை பல மொழிகளில் மொழி பெயர்த்து, அச்சிட்டு தங்கள் மதஸ்தர்கள் அல்லாத ஒவ்வொருவர் கையிலும் கூட கிடைக்கும் வண்ணம் தங்கள் வேதத்தையும் மதத்தையும் பரப்பி வருகிறார்கள். முகம்மதியர்களும் கிருஸ்தவர்களும் இத்தகைய முயற்சி எடுத்து தங்கள் மதங்களையும், வேதங்களையும் மற்ற மக்களிடம் பரப்பினதால்தான் ஏழரைக் கோடி முகம்மதிய சகோதரர்களும் ஒரு கோடி கிருஸ்தவர்களும் நமது நாட்டில் உண்டாக நேரிட்டது. இந்த ஏழரைக்கோடி முகம்மதியரும் அரபி அல்லது துருக்கி முதலிய தேசத்திலிருந்து வந்தவர்களென்று யாராவது சொல்லமுடியுமா? முடியாது. அப்படி வந்தவர்களும் ஒரு கோடிக்கு மேலிருக்க முடியவே முடியாது. மற்ற மக்கள் நம் "இந்து" மதத்திலிருந்து பிரிந்து சேர்ந்தவர்களே யாவார்கள். கிருஸ்தவ சமயத்திலும் வெளியிலிருந்துவந்தவர்கள் 2 அல்லது 3 லட்சம் பேரேயிருப்பார்கள். மற்ற 97 லக்ஷம் பேரும் நம்மக்கள்தான். திருவனந்தபுரத்திலே 40 லட்சம் மக்களுள் பதினாறரை லக்ஷம் கிருஸ்தவர்களும், மூன்றரை லக்ஷம் முகம்மதியர்களும் உண்டாகி யிருப்பார்களானால் எத்தனைமக்கள் நம் சமயம் விட்டுப் பிறசமயம் புகுந்தார்களென்பது இதில் காணக் கிடக்கின்றது. வாரம் ஒன்றுக்கு இந்துக்களென்போர்களில் 4000 பேர் அன்னியமதம் புகுகின்றார்கள். காரணம்? அவர்கள் மதப்பிரசாரம் செய்கிறார்கள். மதப்பிரசாரம் செய்து ஏற்றுக்கொண்ட மக்களுக்கு முதலில் மதத்தைப்பற்றியும் கல்வியிலும் பயிற்சியடையச் செய்கிறார்கள். பின்பு அவன் வாழ்க்கையை செவ்வனே கழிக்க ஒரு தொழில் ஏற்படுத்தி பின்பு தங்கள்மதமே உலகத்தை ஆளவேண்டுமென்ற உணர்ச்சியை உண்டாக்குகின்றார்கள். இவ்வளவு காரியத்திற்கும் அவர்கள் வெகு குறைந்த பணத்தைத்தான் மதத்தின் பெயரால் செலவிடுகிறார்கள். ஆனால் அவர்கள் நாம் மதத்தின் பேரால் செலவிடுவதில் 100-ல் ஒரு பங்குகூட செலவு செய்வதில்லை, நம்மைப்போல் மற்றெந்த மதக்காரர்களும் செலவிடமாட்டார்கள். கிருஸ்தவர்கள் நம் நாட்டிற்கு வந்து சொற்ப நாள்களுக்குள் நம் மக்களைச் சேர்த்து கல்வி கற்பித்து அவர்களை நமக்கு எஜமானர்களாக்கி யிருக்கிறார்கள். உயரிய நிலைக்கும் கொண்டு வருகிறார்கள். 100-க்கு 90 பேர் படிக்கும்படி செய்து வருகிறார்கள். ஆனால் கடவுளால் ஏற்படுத்தப் பட்டதென்றும் கோடி கோடி வருஷங்களானதென்றும் சொல்லும் நமது மதத்தையோ பெரும்பான்மையான மக்கள் படிக்கக்கூடாது. அப்படி மீறி படித்தால் நாக்கை அறுக்கவும், கேட்டால் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவும், படித்துவிட்டால் நெஞ்சை அறுக்கவும், மற்றும் பலவிதமான தண்டனைகள் உண்டு. இதன் பலனாய் வெள்ளைக்கார அரசாங்கம் நமது நாட்டிற்குவந்து இப்போதுகூட 100-க்கு 5 பேர்தான் படிக்க முடிகின்றது. அதிலும் 100-க்கு 90 பேர் பார்ப்பனர்கள். ஆனால் இப்போது சிலர் "நாங்கள் படிப்பதை தடுப்பதில்லை வேதத்தைத்தான் படிக்கக் கூடாதென்கிறோமேயன்றி வேறில்லை" என்கிறார்கள். வேதகால கல்வி இக்காலத்தைப்போன்று இங்கிலாந்து, ஐரோப்பா, அரேபியா முதலிய சரித்திரங்களல்ல. மற்றும்சேக்ஸ்பியர் மேக்காலே முதலியவர்களால் எழுதின நூல்களுமல்ல. ஆனால் அக்காலத்திய கல்வியென்பது நீதிகளை உணர்வது. நீதிகளோ வேதமாய் விட்டது. வேதமோ நாம் படிக்கக்கூடாதது. இம்முறையில் நாம் 1000-க்கு ஒருவராவது படிக்க முடியுமா? வெள்ளைக்கார ராஜாங்கம் வராதிருந்தால் நம்மில் ஆயிரத்துக் கொருவராவது படிக்க நமது மதம் இடம் தந்திருக்குமா? வேதம்தான் படிக்கக் கூடாதென்றாலும் வடமொழியாவது கற்றல் கூடாதாவென்றால் அதுவும் கூடாது என்பார்கள். ஏன் என்றால் அது வாயில் நுழையாது என்பார்கள். இல்லை நான் முயற்சி செய்கிறேன் என்று சொன்னால், வேதத்திலுள்ள நீதிகள் அதில் இடை இடையே வருமாதலால் அதைப்படிக்கக் கூடாதென்பார்கள். இம்மாதிரியாகவே மதத்தின் பெயரால் நாம் படும்பாடும் அடையும் இழிவும் செப்பத்தரமன்று. ஆனால் செலவாகும் ரூபாயோ கணக்கிலடங்காது இவ்வளவு ரூபாய் மற்றெந்த சமயக்காரர்களும் சமயத்தின் பெயரால் செலவிடுவதே இல்லை. மற்றமதத்துக்கு யாரோ ஒருவர் இருவர் ஆயிரம் பவுன் 4 ஆயிரம் பவுன் கொடுப்பார்கள். அது சமயத்தைப்பரப்புவதற்கு பயன்படும். சமயம்பரப்புவது என்பதுமக்கள் கல்வி அறிவு, மக்கள் நோய்தீரல், அற்புதம் கண்டு பிடித்தல் முதலியவை. ஆனால் நம் சமயத்திலோ ஒவ்வொருவரும் மத வரி கொடுத்துத்தான் ஆகவேண்டுமென்ற கட்டாயமிருக்கிறது. நம் மாகாணமட்டும் சர்க்கார் கணக்குப்படி ஒரு வருஷத்திற்கு 2 கோடி ரூபாய் மதத்தின் பெயரால் கோவிலுக்கும் மடத்திற்கும்மாத்திரம் வரும்படி வருகிறது. இஃதன்றி தனி மடம் கோவில்களின் வரும்படிகளைக் கணக்குப் பார்த்தால் இப்படி எத்தனையோ பங்கு அதிகமாக முடியும். திருப்பதி கோவிலை மாத்திரம் எடுத்துக்கொண்டால் வருட வருமானம் 20 லட்சமாகும். திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள மூன்று அல்லது நான்கு கோவில்களில் மாத்திரம் வருடத்திறகு 2, 3 லட்சம் வரும்படி ஆகும்.

இன்னும் சிதம்பரம், இராமேஸ்வரம், ஸ்ரீரங்கம் முதலிய பெருமை பெற்ற தென்னும் கோவில்களின் கணக்கைப்பார்த்தால் அதிகமாகவே முடியும். இவைகள் தவிர கணக்குக்கு வராத ரூபாய்கள் எவ்வளவு? உதாரணமாக இங்கிருந்து ஒருவர் திருப்பதிக்கு 2 ஆயிரம் ரூபாய் காணிக்கையாக செலுத்த புறப்படுகிறார் என்றால், அது தவிர அவனுக்கு நேரிடும் செலவு எவ்வளவு? அவன் தன் சுற்றத்தாரை அழைத்துப்போக வேண்டியிருக்கிறது. மஞ்சள் ஆடைதரிக்க வேண்டியிருக்கிறது. மேள வாத்தியங்களுடன் ஊர்வலம் வர வேண்டியிருக்கிறது. வீதிகளில் கோவிந்தா சப்தம் போட்டு பிச்சை வாங்கவேண்டி இருக்கின்றது. இவ்வளவும் செய்து 2 ஆயிரம் ரூபாய் காணிக்கை செலுத்துவது எதற்கு என்றால், அது அவரே செய்து கொண்ட பிரார்த்தனையாம். என்ன பிரார்த்தனை என்றால், அவர் முன்பு காயலாயிருந்த பொழுதோ வேறு கஷ்டமாயிருந்த பொழுதோ கடவுளை வேண்டிக்கொண்டாராம். கடவுளும் அவர் வேண்டுகோளுக்கிணங்கி அவரை நோய் வாயினின்றும் நீக்கினாராம்! அவர் நினைத்ததை அனுகூலம் செய்தாராம்! அதற்காகப் பிரார்த்தனை ரூபாயில் ஒரு காசுகூட குறையாமல் கொண்டுபோய் கொட்டவேண்டுமாம். எனவே இதற்கு மற்ற செலவுகளிருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் எவ்வளவு ரூபாய் செலவாகுமென்று சற்று யோசியுங்கள். இதைப்போன்ற எத்தனை மக்கள் இமயமலையிலிருந்து கன்னியாகுமரி வரையிலுள்ளவர்கள் செல்வார்கள். உற்சவத்திற்காகவும், காணிக்கை வேண்டுதலை இல்லாமல் பல மக்கள் செல்லுகிறார்கள். அந்த முறையில் செலவிடும் செலவு எவ்வளவு? எனவே இவ்வித நம்பிக்கையைப்பற்றி நான் இங்கு சொல்லவரவில்லை. இப்படிச்செலவு செய்யும் பணத்தின் பலன் என்ன? இது என்ன ஆகின்றது? என்பதற்கே இந்த கணக்குச் சொல்லுகின்றேன். இதனால் யார் பலன் அனுபவிக்கிறார்கள் என்பதை பாருங்கள். பச்சரிசி, பாசிப்பயறு, நெய், பாதாமி, சக்கரை இவைகள் வாங்க உதவுகின்றது. இதை யார் சாப்பிடுகின்றார்கள்? (கைதட்டல்) இது தவிர மதத்தின் பெயரால் சடங்குகளுக்கென்று எவ்வளவு வரி கொடுக்கின்றோம்? குழந்தை உற்பத்தி முதல் கடைசி வரையில் கொடுத்து தான் தீரவேண்டிய மாதிரியாய் அமைக்கப் பட்டிருக்கின்றது. ஆனால் இவைகளினால் நாம் அடையும் பலன் என்ன என்று பார்ப்போமானால் நம்மை மிருகத்திலும் கேவலமாய் ஒரு வகுப்பார் மதிக்கும்படி நாமே நம்மை இழிவு படுத்திக்கொள்ளுகிறோம் என்பதல்லாமல் வேறு ஒன்றுமில்லை. ஒருவன் தனது பிரார்த்தனைக்காகவோ தனது பாவம் தொலையவோ என்று ஒரு கோவிலைக் கட்டுகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதனால் அவன் அடைந்த பலன் என்ன? அவனே உள்ளேபுக யோக்கியதையின்றி தனக்கென ஒரு இடம் வெளியிலே ஏற்படுத்திக்கொள்ள வேண்டியிருக்கிறது. நாம் மனிதனாகப் பிறந்தும் மனிதனாக மடிவதற்கில்லையோ! நம் சமயக் கொடுமைகளைப்பற்றி

பல பெரியோர்கள் நமக்கு முன்னும் கண்டித்திருக்கிறார்கள்: சீர்திருத்த முறையிலும் இருந்திருக்கிறார்கள். அதனால் ஒரு பலனும் உண்டாகவில்லை. ஆனால் அவர்கள் எல்லாம் இப்பொழுது ஒரு சிலையாகயிருந்து பூஜை பெற்று வருகிறார்கள். கடைசியாக நம்மவர்கள் 'பெரியோர்கள் போன வழியே நாமும் பின் பற்றுவோம், நமக்கென்ன' என்பார் பலர். அவர் பெரியோர்கள் போன வழியில் மற்றவைகளில் நடக்கிறார்களோ வென்றால் இல்லவே யில்லை. இந்துமத பரிபாலனத்திற்கு என்று ஏற்பட்ட சட்டத்தில் கூட வெறும் கணக்குப் பார்க்கத்தான்சுதந்திரம் உண்டேயன்றி வரவை யோக்கியமான முறையில் செலவழிக்க அதிகாரமிருப்பதாக ஒரு வரிகூட இல்லை. (கைதட்டல்) முன் சொன்னபடி ஒருவர் இரண்டாயிரம் ரூபாய் காணிக்கையாக திருப்பதிக்குச் செலுத்தப்போகிறார் என்று தெரிந்த உடனே மகந்து என்கிற ஒருவர் தனது ஆளை இரயிலுக்கு அனுப்பி அவனை அழைத்து வரச் செய்து "நீங்கள் சென்னையிலிருந்து வருகிறீர்கள், நீங்கள் 2-ஆயிரம் ரூபாய் காணிக்கையாக கொண்டு வந்திருக்கிறீர்களல்லவா" என்றவுடன், இவனுக்கு இஃது எப்படி இவருக்கு தெரிந்தது. எல்லாம் உள்ளது உள்ளபடி உரைக்கின்றாரே யென்று நம்பி அவரிடம் அதிக பக்திசெலுத்தி விடுகிறான். இதைப்பார்த்து மகந்து 'நீங்கள் கொண்டுவந்த ரூபாயை இங்கே என்னிடத்தில் கொடுங்கள். அங்கு கொண்டு போய் கொடாரத்தில் கொட்டினால் சர்க்கார் எடுத்து ஜர்மனி யுத்தத்தில் பட்டகடனுக்கு வட்டியாக உபயோகித்துக்கொள்வார்கள். என்னிடத்தில் கொடுத்தால் நான் நேரிலே கடவுளுக்குச் சேரும்படி செய்வேன்' என்பார். சம்மதித்து கொடுத்தால் வாங்கிக் கொள்ளுவார். சந்தேகப்பட்டால் இதோ பார் இந்த படத்தை என்று ஒரு படத்தை சுட்டிக் காண்பித்து, ஒரு காலத்தில் வெங்கிடாசலபதிசாமி மகந்துவிடம் சதுரங்கமாடி தோற்றதாகவும், அதற்கு நிபந்தனையாக கடவுள் முதலில் மகந்துவை தரிசித்தபிறகு தான் தன்னை தரிசிக்க வேண்டுமென்று உத்திரவு பிறப்பித்தாரென்றும், அங்குள்ள மகந்து ஆள்கள் சொல்லுவார்கள். இதை நம்பிதான் ஆகவேண்டும். நம்பாவிட்டால் 'கங்கை ஆற்றங்கரையிலே காராம்பசுவைக் கொன்ற பாபத்திற்காளாய் தாயைக்கொன்ற பாவத்திற்காளாவாயென்று சொல்லுவான்.' பிறகு பேசாமல் கலகலவென்று ரூபாயை கொட்டி விடுவான். இந்தப் பணங்கள் எல்லாம் மேல் கண்ட 2 லட்சத்தில் சேராது. இதை அடக்க தேவஸ்தான மசோதாவில் சட்டம் இல்லை. இது தவிர அபிஷேகம் 1000 ரூபாய் அல்லது 5000 ரூபாயில் செய்து வைக்கிறார்கள். அல்லது வெள்ளியால் கலசம், பொன் வெள்ளி ரதம் வாகனம் செய்கிறார்கள். பட்டு பீதாம்பரம் சாற்றுகிறார்கள். 50 அல்லது 60 குடம் பால் ஊற்றுகிறார்கள். இதனால் என்ன பலன் என்று அறிய தேவஸ்தான பரிபாலன சட்டத்திலோ மதபரிபாலன சட்டத்திலோ யிடமில்லை. 5000 வருடங்களுக்கு முன்பு கோவில்கள் கட்டப்பட்டன என்கிறார்கள். சில கோவில்கள் அதற்கு முன்பிருந்ததாகவும் சொல்லுகிறார்கள். இம்மாதிரியாக நம் தமிழ் அரசர்களாலும் மற்றும் பெரியோர்களாலும் கட்டப்பட்டு செலவழிக்கப்பட்ட செல்வம் எவ்வளவு! அவர்கள் செய்த மற்ற தர்மங்கள் எவ்வளவு! அவர்களுடைய குடும்பங்கள் இப்போது எங்கே? யாராவது ஒருவரைக்காண முடியுமா? உதாரணமாக தஞ்சாவூர் அரசரை எடுத்துக்கொள்ளுவோம். அவர் கட்டிவைத்த பள்ளிக்கூடங்களும் அக்ரகாரங்களும் மற்றும் பல தர்மங்களும் இன்னுமிருக்கின்றன. அப்படிச்செய்த அந்த அரசாங்கம் இன்று எங்கே! வெள்ளைக்காரன் கையில் போய் சேர்ந்து விட்டது: மீதியுள்ள சொத்துகளுக்கும் சண்டை உண்டாயிற்று. ஒரு காலத்தில் அம்மன்னவனை க்ஷத்திரியன் என்று வானமளாவப் புகழ்ந்து அவரிடம் பிச்சை வாங்கி வயிறு வளர்த்த அன்னக்காவடிகளெல்லாம் நேற்று கலியுகத்தில் பிராமணன் சூத்

நாடார் மகாஜன சங்கத் தலைவர்

திரு. வே. கனகசபை நாடார்.

திரன் என இரண்டு ஜாதிதான் உண்டு என்று கோர்ட்டில் சாட்சியம் கொடுத்திருக்கிறார்கள். நம்மக்கள் இன்னமும் இவைகளெல்லாம் செய்தால் தான் புண்ணியமும் மோக்ஷமும் கடவுள் தயவும் உண்டு என நினைக்கிறார்கள்.

இதைப்பற்றி யாராவது சொன்னால் 'பார்ப்பனர்களை வைகிறார்கள். நாஸ்திகம் பேசுகிறார்கள்' என்று நீலிக்கண்ணீர் விடுகிறார்கள்

இனி சடங்குகளைப்பற்றி சற்று கவனிப்போம், சடங்குக்காக நாம் செலவிடும் பணம் எவ்வளவு, சடங்குக்காக மனிதனென்று நம்மக்கள் கருதுகிறார்கள். பிறப்பதற்கு முன்பே நம்மை சடங்குச் சனி பிடித்துக்கொள்ளுகிறது. கருத்தரிப்பதற்கு முன்பே சடங்கு செய்ய ஆரம்பிக்கிறோம். அதற்கு புரோகிதன் வேண்டும் என்கின்றோம். அவன் வந்து விறகை கொளுத்தி புகைததுக் கரியாக்கவேண்டும அவன்நல்லபிள்ளை பிறக்குமென்றால் தான்நமக்கு நல்ல பிள்ளை பிறக்குமென்று நினைக்கின்றோம். கர்ப்பத்திலேயே உபதேசம் செய்தால்தான் ஞானம்வரும் என்று நினைக்கின்றோம். அக்குழந்தை கீழே விழுந்ததும் சடங்கு செய்ய வேண்டி யிருக்கிறது. சாதகம் பார்ப்பதற்கும், தொட்டிலில் போடுவதற்கும், பாலூட்டுவதற்கும், கோவணம் கட்டுவதற்கும், சவரம் செய்வதற்கும், காது குத்துவதற்கும், பள்ளிக்கூடம் வைப்பதற்கும் சடங்குகள செய்துதீரவேண்டி யிருக்கிறது. குழந்தைக்கு காய்ச்சல் வந்தென்றால் சடங்குதான். இவைகள் எல்லாவற்றிற்கும் பார்ப்பானையே கூப்பிட வேண்டியதுதான். அவனுக்கு பணம் கொடுத்தாக வேண்டியிருக்கிறது. காயலாவந்தாலும் "சனியை சுக்கிரன் பார்க்கிறான். சாந்தி கழிக்க வேண்டும்" என்கிறான். பணம் கொடுப்பதுதான் சாந்தி. கலியாண சடங்கோ பொருத்தம் பார்க்க வேண்டியிருக்கிறது. மரத்திற்கு மரம், பாலுக்குப் பால், கயிறுக்குக் கயிறு, பட்சிக்கு பட்சி எழுத்துக்கு எழுத்து என சிலேட்டுப் பொருத்தம பார்க்கிறான். (கைதட்டல்) இதற்கும் பணம் வேறு. ஒருவன் அந்தப் பெண்ணை அடைய ஆசைப்பட்டால் அந்தப் புரோகிதனுக்கு சாடை செய்து 1000, 500 ரூபாய் தருகிறேன் என்றால் பொருத்த மிருந்தாலும் இல்லை என்றே சொல்லிவிடுவான். அவன் இஷ்டம் போல்அநேகமாக நாளும் நேரமும் வைத்துக்கொடுகின்றான். கல்யாண மந்திர மென்று கருமாந்திரமந்திரமோ ஏதோ சொல்லி காசு வாங்கி போகிறான். சில 10 நாளைக்குள்ளும் அந்தப்பெண் தாலி அறுத்துப்போகிறது. மாமியார் படுத்தும் துன்பமோ சொல்லி முடியாது. புருஷன் படுத்தும் உபத்திரவமோ தரித்திரமோ கணக்கு இல்லை. இதனை, அந்தப் புரோகிதனை அடுத்து இவ்வளவு பொருத்தம் பார்த்தும் ஏனையா இப்படி ஆச்சுது என்றால், "அதன் கர்மம் அப்படி இருக்கிறது. இதற்கு யார் என்னசெய்ய முடியும்" என்று சொல்லி விடுகிறான். அதற்கு ஏன் இவ்வளவு பொருத்தமும் சடங்கும் செய்து பணம் பெற்றாய் என்றால், அது உன்னுடைய முட்டாள் தனம் என்கிறான். பிறகு பிள்ளை பெறாவிட்டால் "எப்படியாவது பிள்ளை பெற்று தீரவேண்டும், காசிக்குப்போ, இராமேஸ்வரத்திற்குப்போ, தருமம் செய், சாந்திகழி, ஓமம்பண்ணு, இல்லையேல் புத் என்னும் நகரத்திற்குப் போய்ச் சேருவாய்" என்கிறான். பிள்ளை இல்லா வீட்டில் சாப்பிட்டால் பெரிய பாவம் என்கிறான்'

உன் பெண்ஜாதியை உன் அண்ணன் தம்பிக்காவது விட்டு பிள்ளை பெற்றுத்தான் ஆகவேண்டுமென்கிறான். இதன் இரகசியம் என்ன? ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவராவது பின் சந்ததி இருந்தால்தான் இப்பார்ப்பனர்கள் சடங்கு செய்து வாங்கித்தின்பதற்கு வழி உண்டு. இல்லையேல் கொடுப்பாரில்லாமல் அந்தச் சந்ததி போய்விடுமே என்பதுதான். கடைசியாய் சாகும் போதாவது நம்மை விட்டுவிடுகின்றனரா. சுங்கச் சாவடிகளில் எப்படி சுங்கம் வாங்கினபிறகு வண்டிபோக அநுமதியளிக்கின்றனரோ, அதைப்போல் இறந்து போகிறவன் இங்குள்ள பார்ப்பானுக்கு சுங்கம்கொடுத்துத்தான் ஆகவேண்டியிருக்கிறது என்னவென்றால், இறந்தவன் மோட்சமடைய வேண்டுமானால் இங்குள்ள பார்ப்பானுக்கு ஒரு

இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க

பிராமணர்கள்.

ஸ்ரீமதி காதிரைன் மேயோ எழுதிய “இந்திய மாதா” என்னும் நூலில் பிராமணரைப் பற்றிக் காணப்படும் விஷயமாவது,

“சென்னை ராஜதானியே பிராமணீய இந்து மதத்தின் கோட்டை போன்றது. பூர்வ குடிகளான திராவிட மக்களின் இருப்பிடமும் சென்னை ராஜதானிதான். பிராமணீய இந்து மதம் தான் திராவிட மக்களை சின்னாபின்னப் படுத்தியது. அவர்களைப் பல ஜாதிகளாகப்பிரித்து அவர்களை அழுத்தி வைத்தது. அவர்களை அடிமையாக்கி வைத்தது. அவர்களை பறையர் கீழ் ஜாதியார் எனக் கோடிக்கணக்காக பிரிவாக்கி ஒடுக்கி வைத்ததுடன், கல்வியறிவில்லாதார்களாகவும் ஏழைகளாகவும் செய்து வைத்தது. பிரிட்டிஷார் வந்த பிறகுதான் சமாதானமும் ஒழுங்கும் ஏற்பட்டதுடன் மக்களும் மனித உரிமை பெறத் தொடங்கினர்.

காலக்கிரமத்தில் திராவிட மக்கள் கண் விழித்தனர். பிராமண மதப்படி கீழ் ஜாதியாராகக் கழித்துத் தள்ளப்பட்டிருந்தவர்களும் திராவிட மக்களைப்பார்த்து தலை தூக்கத்தொடங்கினர். இப்பொழுது பிராமணரொழிந்த மற்ற திராவிட மக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு பிராமணரல்லாதார் கட்சி ஸ்தாபனம் செய்திருக்கிறார்கள். அவர்கள் ஒரு சக்தியுடைய கட்சியாயிருப்பதால் சென்னை சட்ட சபையில் பிராமணர் பெற்றிருந்த அரசியல் ஆதிக்கத்தைத் தொலைத்து அரசியல் அதிகாரங்களையும் தம வயப்படுத்திக்கொண்டனர். இந்து தேச சரித்திரத்தில் இது மிகவும் முக்கியமான ஒரு சம்பவமாகும்.

இந்தக் கீழ் ஜாதியிலிருந்து உன்னத நிலைமைக்கு வந்தவரு, சீமானும், அரசியல வாதியும், பொதுஜன மதிப்புப்பெற்றவருமான ஒரு கனவானை நான் சென்னையில் அந்தரங்கமாக சந்தித்துப் பேசினேன். அவர் மிகவும் உற்சாக குணமுடையவர், தாராளமாகப் பேசும் இயல்பும் சுறுசுறுப்புமுடையவர். பிராமணன் குணங்களை விளக்கிக்கூற முடியுமா? என நான் அவரிடம் கேட்டேன். அவரும் விளக்கிக்கூறுவதாக சம்மதித்துக் கூறத்தொடங்கினர். நான் அவர் கூறியவற்றை அப்படியே எழுதிக்கொண்டேன் அவை பின்வருமாறு :—

பண்டு எல்லாமனிதரும் அவரவர் இஷ்டப்படி வாழ்ந்து வந்த காலத்தில் பிராமணன் மட்டுமே கல்வி கற்கத் தொடங்கினான். அவன் கல்வியில் தேர்ச்சியடைந்த பிறகு இயல்பாகவே தந்திரசாலியான பிராமணன் புராண சாஸ்திரங்களெல்லாம் கைப்பற்றி பிராமணனே எல்லா ஜனங்களையும் விட உயர்ந்தவன், மேல் ஜாதியான் என்றெல்லாம அப்புத்தகங்களில் எழுதிவைத்துவிட்டான். இவ்வாறு பல நூற்றாண்டுகள் கழிந்தன. பிராமணர்களைத் தவிர வேறொருவரும் படிக்கவேயில்லை. படிப்பை தன் ஜாதிக்குமட்டுமே சொந்தமாக்கிக் கொண்ட பிராமணன் மற்றஜாதியார் கல்வி கற்கக்கூடாதென்றும், உலகத்திலே பிராமணனே கண்கண்ட தெய்வமென்றும், நூல்களில் எழுதிவைத்துவிட்டதினால் அறிவற்ற ஜனங்கள அவன் எழுதி வைத்தவைகளெல்லாம் உண்மையென நம்பத் தொடங்கினர். ஆகவே இந்து இந்தியாவில் பிராமணன் தலைவனானான். அவன் வார்த்தைக்கு எதிர் வார்த்தைகூற ஒருவருமதைரியங்கொள்ளவில்லை. ஆங்கிலேயர் வந்து எல்லா ஜாதியாருக்கும் பொதுவான பள்ளிக்கூடங்கள் கட்டும் வரை இந்நாட்டில் இந்த நிலைமையே நிலை பெற்றிருந்தது.

“இப்பொழுது நாங்கள் பிராமணர்களுடன் போர்தொடுக்க தொடங்கியிருக்கிறோம். பல்லாயிரக்கணக்கான வருஷமாக பிராமணன் உயர்ந்த நிலைமையிலிருந்து வந்ததனாலும், பேய்களைப் போல தந்திரமும சூட்சியும உடையவனானதாலும், பிராமணனை ஜெயிப்பது எங்களுக்கு கஷ்டமாகவேயிருக்கிறது. பத்திரிகைகள் எல்லாம் பிராமணர்களுக்கே சொந்தமாக இருக்கின்றன. கோர்ட்டு கச்சேரிகளும் அவர்கள் கையில்தான் சிக்கியிருக்கின்றன. சர்க்கார் உத்தியோகங்களில் 100-க்கு 80-ம் பிராமணருக்குத்தான் சொந்தமாயிருக்கின்றன. ஏழை எளியவர்களை, விசேஷமாகப் பெண்களை, அவர்கள் பயமுறுத்தி வருகிறார்கள். ஏனெனில் அவர்களில் பெரும்பாலர் எழுதப் படிக்க தெரியாதவர்களாயும் குருட்டு நம்பிக்கையுடையவர்களாயும் இருக்கிறார்கள். எங்களை இந்த இழிவான நிலைமையில் வைத்திருக்கத் தேவையான சூழ்ச்சிகளெல்லாம் “பூதேவர்களான” பிராமணர்கள் செய்துவைத்திருக்கிறார்கள். எங்களைப் பிராமணர்கள் கசக்கிப்பிழியாமல் பிரிட்டிஷார் தடுத்து வருவதினால் பிராமணர்கள் பிரிட்டிஷாரை வெறுக்கத் தொடங்கியிருக்கிறார்கள். பிரிட்டிஷார் போய்விடவேண்டுமென்று பெரிய தேசாபிமானி போல பிராமணன் கூச்சல் போடுகிறான். பிரிட்டிஷார் போய்விட்டால் இந்தியாவின் நிலைமை எப்படியாகுமென்று எங்களுக்குத்தெரியும். பிரிட்டிஷார் போனவுடன் பிராமணன் எங்களை மூச்சைப் பிடித்துக்கொல்லத் தொடங்கி விடுவான். ஆங்கிலேயர் வருமுன் இந்தியாவிலிருந்த பழைய அநாகரிக நிலைமையும் சீக்கிரம வந்துவிடும். பண்டையப் புரோகித அரசாட்சி ஆரம்பமாகி விடும் இந்தியாவிலேயே சர்க்காருக்குக் கொடுக்கும் வரியைவிட எவ்வளவோ ஜாஸ்தியான வரிகள் ஜனங்கள் பிராமணனுக்குக் கொடுக்க வேண்டும். பிறந்தது முதல் இறக்கிறது வரை பிராமணனுக்கு உழைத்துப்போடவேண்டியதுதான் பிராமணரல்லாதார் கடமை. ஒரு குழந்தை பிறந்தால பிராமணனுக்கு தக்ஷிணை கொடுக்கவேண்டும். கொடுக்காவிட்டால் குழந்தை வாழாதாம். குழந்தை பிறந்த 16-வது நாள் வீட்டைச் சுத்தம செய்யவும பிராமணனுக்கு தக்ஷிணை கொடுக்கவேண்டும். கொஞ்சம கழித்து குழந்தைக்குப் பெயரிடும் போதும, மூன்றுவது மாதத்தில் குழந்தைக்கு குடுமி வைக்கும்போதும், 6-வது மாதத்தில் குழந்தைக்கு சோறூட்டும்போதும பிராமணனுக்கு தட்சணை வழங்க வேண்டியது தான். குழந்தை நடக்கத் தொடங்கும்போதும் பிராமணனுக்கு காணிக்கை கொடுக்கவேண்டும். பிறந்த நாளன்றும் பிராமணனுக்குப் பணம் வழங்க வேண்டும். 7-வது வயதில் குழந்தையைப் பள்ளியில் வைக்கும்போதும் பிராமணனுக்கு தட்சணை செலுத்த வேண்டும். பணக்காரக் குடும்பங்களில் தங்க எழுத்தாணியை குழந்தை கையில் கொடுத்து வித்தியாரம்பம் செய்யப்படுகிறது. கடைசியில் தங்க எழுத்தாணி பிராமணன் கையில் போய்ச் சேருகிறது. பெண் குழந்தை பிறந்தது முதல் 16 வது வயதில் கலியாணமாகும் வரை ஒவ்வொரு காரணத்தை சொல்லி பிராமணனுக்கு தட்சணை கொடுக்கவேண்டும். கலியாணம் ருதுசாந்தி காலங்களிலும் பிராமணனுக்கு ஏராளமாக தட்சணை கொடுக்கவேண்டும். சூரிய சந்திர கிரஹணகாலங்களிலும் பிராமணனுக்கு பணம் கொடுக்கவேண்டும். ஒருவன் இறந்தால் பிராமணனுக்குப்பணம் கொடுக்காமல் பிரேதத்தை அடக்கம்செய்யக்கூடாது. பிறகு ஒரு வருஷம் முடியுமட்டும் மாதந்தோறும் பிராமணனுக்கு சிரார்த்தம் கொடுக்கவேண்டும், ஏனென்றால் பிராமணன் உண்பதும், உடுப்பதும், குடிப்பதும், பிதுர்க்களுக்குத் திருப்தி செய்யக்கூடியதாம். ஆகவே மகனுடைய ஜீவிய காலம் முழுவதும் வருஷத்தில் ஒரு நாள் சிராத்தம் நடத்தி பிராமணர்களைத் திருப்தி செய்யவேண்டும்.

மதாசாரப்படி இந்த வருமானமெல்லாம் பெற பிராமணன் உரிமை பாராட்டுகிறான். இந்த மதாசாரங்களைச் சரிவர நடத்தாதவர்களுக்கு நரகம் கிடைக்குமென்று பிராமணன் எழுதி வைத்திருக்கிறான். இந்த சடங்குகள் நடத்தும்போது பிராமணனுடைய பாதங்களைக்கழுவி அந்த அழுக்கு நீரை ஜனங்கள் குடிக்கவேண்டும். பிராமணன் உடம்பு வளைந்து வேலை செய்வதே கிடையாது. ஏழைகளிடமிருந்து பொய்க் காரணங்கள் சொல்லி பணம் பிடுங்கி உண்டு சோம்பேறி வாழ்க்கை நடத்துகிறான். வக்கீல் உத்தியோகமோ சர்க்கார் உத்தியோகமோ தவிர வேறு ஒரு வேலையும் பிராமணன் பார்ப்பதில்லை. இந்த மாகாணத்தில்15லட்சம்பிராமணர்கள்இருக்கிறார்கள். அவர்களுக்கு உழைத்துப்போடவேண்டியது சுமார் 4 கோடி பிராமணரல்லாதார் கடமையாக ஏற்பட்டிருக்கிறது.

ஆகையால் நாங்கள் சுதந்தரம் பெற்று பிறர் உதவியின்றி வாழ சக்திபெறும் வரை எங்களுக்கு சமாதானத்தையும தற்காப்பையும அளிக்க அன்னிய தேச அரசர் ஆளுகையிலிருக்கவேண்டி இருக்கின்றது. எங்களைப் பிய்த்துப் பிடுங்கித் தின்று உயிர்வாழ்ந்து கொண்டு, நாங்கள் தொட்டால் அசுத்தமேற்படுவதாக கூறும 15 லட்சம் பார்ப்பன எஜமான்களுக்கு அடிமையாக இருக்க எங்களுக்கு இனி இஷ்டமில்லை.’

மநு நீதி போன்ற அதர்ம நீதி உலகில் மற்றொன்றும் இல்லை



குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஞு ஐப்பசி 7உ

ஸ்ரீ ஜோசப் கற்ற பாடம்.

ஸ்ரீமான் ஜார்ஜ் ஜோசப் மதுரையில் ஓர் பிரபல பாரிஸ்டர். நல்ல குடும்பத்தில் பிறந்து நல்லொழுக்கத்தில் சிறந்து அதிக வருமானமும் வக்கீல் தொழிலும் உடையவராய் மதுரைக்கு ஓர் மாமணியாய் விளங்கி வந்தவர். சேலம் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவின்மேல் மதுரையில் கேசு ஏற்பட்டபோது, பொதுவாழ்வில் உணர்ச்சி மேலிட்டு தீவிரமாய் ஜார்ஜ் ஜோசப் இறங்கி இடைவிடா ஊழியம் புரிந்து வந்திருக்கிறார். மதுரை மில்களிலுள்ள தொழிலாளர்களின் கஷ்ட நஷ்ட காலங்களிலும், வேலைநிறுத்த காலங்களிலும் அவர்களுடன் கலந்து அதில் ஈடுபட்டு தம்மாலான சகல உதவிகளையும் தியாகத்துடன் செய்து வந்திருக்கிறார். மதுரை ஜில்லா கள்ளஜன சமூகத்தாருக்கு ஏற்பட்ட கொடுமையான சட்ட திட்டங்களுக்கு அனுவசியமாய் அவர்கள் இரையாகாதிருக்கும்படி சாக்கிரதையாய் கவனித்து வந்தார். அவர்களுடைய சத்தியாக்கிரகத்தின் போதும், அவர்களுடைய சில கிராமங்களைப் போலீசார் கொளுத்தி பலரை சுட்டுக் கொன்று பலரைக் கைதிசெய்து பெண்டு பிள்ளைகளையும் இம்சித்துவந்த அந்தக்காலத்தில் ஸ்ரீமான் ஜோசப் தம் காலத்தையெல்லாம் கள்ளர்களுக்காகவே செலவிட்டு உதவி புரிந்து வந்ததை இன்றும் அந்த கள்ள மகா ஜனங்கள் மறந்துவிடவில்லை. ஜார்ஜ் ஜோசப் (ரோஜாப்பூ துரை) என்று சொன்னால் கள்ளர் நாட்டில் கடவுளுக்குரிய மரியாதையும பயபக்தியும் காட்டப்படும். ஒத்துழையாமைக் காலத்தில் தமது தொழிலை விட்டு காந்திவழி நின்று சிறந்த தொண்டாற்றினர். வங்கத்தில் தாசைப்போல் தமிழகத்தில் ஜோசப் தியாகத்தில் முன்னின்றார். மனைவி மக்களுடன் வைக்கம் சென்று சத்தியாக்கிரகம் செய்து தீண்டாமைக்காகச் சிறை சென்றார். இவரில்லாத காலத்து மிக்க கஷ்ட நஷ்டத்தில் இவரில்லக் கிழத்தியார் அந்த சத்தியாக்கிரகத்தில் முன்னின்று [illegible] வந்தார். பின்னர் அலகாபாத் சென்று "இண்டிபெண்டெண்டு" என்ற தேசீய ஆங்கில தினசரிக்கு ஆசிரியராய் அமர்ந்து அரிய ஊழியம் புரிந்துவந்தார். அதன் பயனாய் ராஜத்துவேஷத்திற்காக இரண்டு வருஷம் வட இந்தியாவில் கடுங்காவல் தண்டனையை அனுபவித்தார். மகாத்மா காந்தியடிகள் சிறையிலுள்ளபோது சில காலம் ஸ்ரீமான் ஜோசப் வெளியிலிருக்க நேர்ந்தது. அப்போது காந்தியடிகளுக்குப் பதிலாக அவர் ஸ்தானத்தில் அமர்ந்து காந்தியடிகள் பத்திரிகையாகிய "யங் இந்தியா"வை ஆசிரியராக இருந்து நடத்தி வந்தார். காந்தி விடுதலை பெற்றதும் வட இந்தியாவிலிருந்து தமிழ்நாடு வந்து மதுரையம்பதியை யடைந்தார். அடிகளின் பர்டோலி தீர்மானமும் ஒத்துழையாமையைக் கொன்ற சுயராஜ்ஜியக் கட்சியாரின் சட்டசபை நுழைவையும் பகிஷ்கார நிறுத்தத்தையும் காந்தி ஆதரிக்க முற்பட்டதின் பலனாய் அநேக உண்மைத் தொண்டர்களுக்கு ஏற்பட்ட வருத்தத்தைப் போலவே ஸ்ரீமான் ஜோசப்புக்கு மிகுந்த மனவருத்தமும் வெறுப்பும் உண்டாகி விட்டது. தியாகமும் செய்து, காரியமும் கெட்டு, நாட்டில் ஆதரவும் இல்லாதபோது வறுமைவாய்ப்பட்டு, சுயமரியாதையை இழப்பதற்குச் சம்மதியாமல் மறுபடியும் மதுரையில் தம்முடைய வக்கீல் தொழிலை ஸ்ரீமான் ஜோசப் ஆரம்பித்தார். சிறிதுகாலத்திற்குள்ளே ஆயிரத்திற்குக் குறையாத வரும்படியையும் செல்வாக்கையும் பெற்றுவிட்டார். இவரிடம் தமிழ் நாட்டார் தங்களுக்குரிய மதிப்பையும் அன்பையும் காட்டுவதற் கறிகுறியாகவே இவர் தமிழ் மாகாண மகாநாடு சேலத்தில் கூடியபோது ஏகமனதாய் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். இவ்வளவு செல்வாக்கும் பெரும் புகழும் கீர்த்தியும் வாய்ந்த திரு ஜோசப் திடீரென்று பிராமணர்களின் மாயவலைக்குள் சிக்கி சுயராஜ்யக் கட்சியை ஆதரிக்க முன் வந்தார். ஜஸ்டிஸ் கட்சியை மிகவும் பலமாய்த் தாக்கி பனகால் மந்திரி சபையை யுடைப்பதற்காக அரும் பாடுபட்டார். சுயராஜ்ய கட்சியாரைவிட இன்னும் ஒருபடி அதிகமாய்ப் போய் ஸ்ரீமான் நாயுடு சொன்னதுபோலவே சட்டசபையில மந்திரி உத்தியோகம் முதலானவைகளையுங்கூட ஒப்புக்கொள்ள வேண்டுமென்றார் உண்மையான ஒத்துழையாமைக்கும் மாறுபட்ட அபிப்பிராயங்கொண்டு பிராமணர்களுக்கும் சுயராஜ்யக் கக்ஷியாருக்கும் ஆபத்தில் உற்ற துணையாக விளங்கினர். டாக்டர் சுப்பராயன் மந்திரி சபையை ஆதரித்து சுயராஜ்யக் கக்ஷியாரின் மறைவான வேண்டுகோளை நிறைவேற்றி வைக்க மதுரையில் அக்கிராசனமவகித்துப் பேசியும், பல ஆதரவுக் கடிதங்கள் எழுதியும் வந்தார்; மதுரையில் நடந்த பிராமணரல்லாதார் மகாநாட்டின் நடவடிக்கைகளில் கூட கலந்துகொள்ளாமல் பிராமணர்களுக்குப் பயந்துகொண்டு சும்மாயிருந்துவிட்டார். கோவை மகாநாட்டில் பிராமண பிராமணரல்லாதாருக்கு ஒற்றுமை ஏற்பட போவதையறிந்து, பிராமணர்களின் கட்டளைப்பெற்று அந்த மகாநாட்டைத் தாக்கி எழுதிப் போந்ததுமல்லாமல் அதில் கலந்துகொள்ளாமல தனித்து நின்றுவிட்டார். இம்மாதிரி நிலைமையில் ஸ்ரீமான் ஜார்ஜ் ஜோசப் தனது உழைப்பு, தியாகம், தீவிரக்கொள்கை, இவற்றையெல்லாம் விட்டு பிராமணர்களுக்கு அடிமையாயிருந்து வந்ததால் பிராமணப் பத்திரிகைகளான ஹிந்துவும், மித்திரனும், சுயராஜ்யாவும், ஸ்ரீமான் ஜோசப் தும்மினாலும், இருமினாலும், மூச்சு விட்டாலும், பேசினாலும், எழுதினாலும், தந்தியில் அவைகளை வரவழைத்துப் பெரிய எழுத்தில் பிரபலமான இடத்தில் பிரசுரித்து அவசியமாயின் அதன்பேரில் தலையங்கங்களையும் எழுதிவந்தன. அசோசியேட் பிரசும், பிரீ பிரசும், ஜோசப் வீட்டு வாயில்படியை காத்துக் கொண்டிருந்தன.

இப்படியெல்லாம் இருக்க ஸ்ரீ ஜார்ஜ் ஜோசப் அவர்களுக்கு இப்போது பிராமணர்களும், சுயராஜ்யக்கட்சியாரும், பிராமணர்கள் ஆதிக்கம் நிறைந்த காங்கிரஸ் கட்சியாரும், பிராமணப்பத்திரிகைகளாகிய ஹிந்து, மித்திரன், சுயராஜ்யாவும் என்ன சன்மானம் செய்தன என்பதை யோசித்துப்பாருங்கள். கேவலம் ஒரு சிறு முனிசிபாலிட்டியில் உள்ள ஒரு முனிசிபல் கவுன்சிலர் ஸ்தானத்தைகூட அவர் அடைய முடியாமல் செய்து கைவிட்டு விட்டனர். ஸ்ரீ ஜோசப்பின் உதவியைக் கொஞ்சமும் நினையாமல் அவர் செய்த பனை அளவு நன்றிக்கு பதிலாக பிராமணர்கள் தினையளவு நன்றி கூடக்காட்டத் தயாராயில்லாமல் ஒரே அடியாய் தங்கள் இனத்தாரையே ஆதரித்து விட்டார்கள்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்ற பொய்யா மொழிவாக்கை பொய்யாக்க வந்த பிராமணர்களுக்கு நான் மனமார நன்றி செலுத்துகின்றேன். மதுரையில் இவ்வாறு பிராமணர்கள் செய்திராவிடில் சேலத்தில் ஸ்ரீ. பி. சுப்பராவ் மூன்று ஓட்டுகள் மட்டும் பெற்று நம்மை கௌரவித்திருப்பாரா? ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீமான் கே. வி. ரங்கசாமி அய்யங்கார் எம். எல். ஏ. யும் அவர் தம்பி ஸ்ரீமான் கே. வி. சீனிவாசய்யங்காரும், சென்னையில் காமத்தும், மற்றும் ஆங்காங்கு பார்ப்பன அபேக்ஷகர்களும் வரிசையாய் தோல்வி அடைந்து இருக்க முடியுமா? மதுரையில் ஸ்ரீ ஜோசப் முனிசிபல் கவுன்சிலின் ஒரு ஸ்தானத்திற்கு அபேக்ஷகராய் காங்கிரஸ் சுயராஜ்யப் பிராமணக் கட்சியாராலேயே நிறுத்தப்பட்டார். உள்ளே பகையும் உதட்டில் உறவும் வைத்துள்ள பிராமண காங்கிரஸ் ஓட்டர்கள் மறைவாய் ஸ்ரீ ராமனுதய்யரை எதேச்சைவாதியாய் நிற்கும்படி செய்து ஓட்டுக்கொடுத்து வெற்றியை உண்டாக்கி ஸ்ரீ ஜோசப்பை தோல்வியுறும்படி செய்து அவமானப் படுத்தி விட்டார்கள். "குதிரை கொன்றதுமல்லாமல் குழியையும் தோண்டுவது" போல ஸ்ரீ ராமனுதய்யர் தாம் தான் ஓட்டர்களால் விரும்பப்பட்ட உண்மையான காங்கிரஸ் வாதி என்றும், ஸ்ரீ ஜோசப் மகா ஜனங்களால் வெறுக்கப்பட்டபடியால் தோல்வியுற்றார் என்றும் சொல்ல முன் வந்துவிட்டார். அந்த டிவிஷனில் உள்ள பிராமண ஓட்டர்களும், ஸ்ரீ ஜார்ஜ் ஜோசப் 30உ தங்களை பயமுறுத்தி ஓட்டை அடைய முயற்சித்ததால் 31-உ ஸ்ரீ ராமனுதய்யருக்கே தங்கள் ஓட்டுகளை எல்லாம் கொடுத்த

தாகவும் கையெழுத்திட்டு மித்திரனில் பிரசுரித்திருக்கிறார்கள். ஸ்ரீ ஜோசப் தோல்வியிலிருந்து அவருடைய பெரிய பிரசங்கங்களும் அறிக்கைகளும் பிராமணப் பத்திரிக்கைகளில் இடம்பெற முடியவில்லை. அவரை ஏமாற்றி ஜெயித்து விட்டதாகக் கூறி ஆகாயத்தில் பறக்கும் குப்பை கூளம் பதர்களின் பல கடிதங்கள் தந்தி மூலம் இடம் பெற்று பிராமணப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. காங்கிரசினிடமிருந்து ஸ்ரீமான்கள் பி. வரதராஜுலு நாயுடு, ஈ. வெ. ராமசாமி நாயக்கர், திரு. வி. கலியாணசுந்தர முதலியார் போன்றவர்களை நீக்கிவிட்டு காங்கிரசை பரிசுத்தப்படுத்த எண்ணிப்பேசிய ஸ்ரீ சீனிவாசய்யங்காரைப் பின்பற்றி மதுரைப் பிராமணர்களும் ஸ்ரீ ஜோசப்பை காங்கிரசினின்றும் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்காமல் விலக்கி மதுரையையும், மதுரைக் காங்கிரஸ் கமிட்டியையும் பரிசுத்தப்படுத்தி புண்ணியாவாஹம் செய்து விட்டார்கள். இதை மறைப்பதற்காக ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் மகாத்மா காந்தியை ஜோசப் வீட்டில் இறக்கி அவரைக்கொண்டு ஸ்ரீ ஜோசப்புக்கு ஆறுதல் சொல்லச்செய்திருக்கிறார். இவற்றையெல்லாம் பார்க்கும்போது இவ்வளவு காலந்தாழ்ந்தும் இவ்வளவு அனுபோகம் பிறந்தும் ஸ்ரீ ஜார்ஜ் ஜோசப்பிற்கு இன்னும் சரியான புத்தி வந்ததாகத் தெரியவில்லை இன்னும் பிராமண மயக்கமும், சூழ்ச்சியும் தம்மை விழுங்கிவிட்டதிலிருந்து மீளமுடியாமல் தவிக்கிறார் பார்ப்பனரை விட்டுப் பிரிந்தால் வாழ முடியாது என்று நினைக்கிறார். எப்படியெனில் இத்தோல்வியை ஆதாரமாகக் கொண்டு தாம் பிராமணர்களிடத்தில் போய் பிரசாரம் செய்து அவர்களை நல்வழியில் திருத்தப் போகிறாராம். எத்தனையோ காலமாய் எத்தனையோ பெரியார்களால் திருத்தமுடியாத பிராமணர்களை ஸ்ரீ ஜோசப் திருத்துவது நரியை பரியாக்குவது போல்தான் முடியும். எப்படியாவது போகட்டும் கெட்டவர்களுக்குப் பட்டது புத்தி; எனினும் அவருக்கு ஒன்று சொல்லுவோம் அதாவது இப்பொழுதாவது பிராமணரல்லாதவர்களுடன் ஒன்று கூடி பிராமணர்களின் வகுப்புவாதத்தைப்பற்றி எச்சரிக்கை செய்து சாக்கிரதையாய் இருக்கும்படி நாட்டிற்கு பிரசாரம் செய்தால் ஸ்ரீ ஜோசப் தமக்கும், தம்முடைய வகுப்பிற்கும் நன்மை செய்தவராகக் கருதப்படுவார். இதைச்செய்யாமல் மறுபடியும் விரோதிகளுக்கே உடந்தையாயிருந்து உதைத்தகாலுக்கு முத்தம்கொடுத்துக்கொண்டிருந்தால், அவர் மற்றொரு தோல்வி பெற்று நமக்கிடையில் வந்து சேரும்வரை பிராமணரல்லாத சமூகம் ஸ்ரீ ஜோசப்புக்காகக் காத்திருக்க முடியாதென்பதை அவருக்கு பணிவுடன் அறிவிக்கிறோம். பிராமணரல்லாத சகோதரர்களே! நீங்கள் மதுரையில் நடந்ததை ஸ்ரீ ஜோசப்புக்கென்று நினைத்து பாராமுகமாயிருக்க வேண்டாம். அது பிராமணரல்லதார் ஒவ்வொருவருக்கும் பிராமணர்களால் வழக்கம் போல் ஏற்படுத்தப்பட்டு வருகிற அநீதி, அக்கிரமம், சூழ்ச்சி, என்று உணர்ந்து ஒற்றுமைப்பட்டு, தமிழ் நாட்டிலுள்ள எல்லா பிராமணரல்லாதாரும் ஸ்ரீ ஜோசப் கற்ற பாடத்தால் எச்சரிக்கையாயிருந்து, பிராமணர்களிடமிருந்து தப்பி, சுயமரியாதையையும் சுயராஜ்ய ஸ்தாபனங்களையும் அடைந்து ஜெயமடைய பாடுபடப் பார்ப்பாய் வேண்டிக் கொள்கின்றோம்.

"சூத்திரன்"

"தோலைக்கடித்து துருத்தியைக் கடித்து மெள்ளமெள்ள வேட்டை நாய் ஆகிவிட்டது" என்பதாக தமிழ்நாட்டுப் பழமொழி ஒன்று உண்டு அதுபோல் தற்காலத்திய நமது அரசாங்க நிருவாகம் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை விஷயத்தில் வேண்டுமென்றே கொடுமைசெய்து கொண்டு வரத்துணிந்து விட்டதென்றே நினைக்கவேண்டியிருக்கிறது. அதிலும் இதுசமயம் தமிழ் மக்கள் பெரும்பாலும் அரசியல் முதலியவைகளைக்கூட லக்ஷியம் செய்யாமல் தங்கள் சுயமரியாதையைப் பெருக்குவதே முக்கிய நோக்கமாகக் கொண்டு உயிரைக்கொடுத்து வேலை செய்து கொண்டிருக்கும் சமயத்தில், அரசாங்கம் இவ்வளவு போக்கியப்பொறுப்பற்ற தன்மையாய் நடக்கக் கூடியதாய் இருந்தால், சாதாரணகாலங்களில் எப்படி நடக்கமாட்டாது என்பதைப் பொது மக்கள் யோசித்துப்பார்க்கவேண்டும். இந்தத்தடவை கூட்டப்பட்ட சென்னை சட்டசபைக் கூட்டத்தில், ஸ்ரீமான் சல்டானா என்கிற ஒரு சட்டசபை அங்கத்தினர் ஸ்தல ஸ்தாபன இலாக்காவில் சென்ற ஆறு மாதங்களில் எத்தனை ஸ்தானங்கள் சர்க்காரால் நியமனம் செய்யப்பட்டதென்றும், நியமனம் செய்யப்பட்டவர்கள் எந்த எந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்றும் ஒரு கேள்வி கேட்டிருந்தார். அதற்குப் பதில் சொல்லும் முகத்தால் வகுப்புகளைப் பிரித்துக்காட்டியதில் சென்னை அரசாங்கம் ஒரு புது முறையைக் கையாண்டிருக்கிறது அதாவது:—ஜாதி அல்லது வகுப்பு என்ற தலைப்பகத்தில்,

ஐரோப்பியர்,
ஆங்கிலோ இந்தியர்,
இந்திய கிறிஸ்தவர்,
மகம்மதியர்,
ஆதித்திராவிடர், ஆதி ஆந்திரர்.

என்று பிரித்துவிட்டுப் பார்ப்பனரல்லாதார் என்பதாக ஒரு உபதலைப்பகம் கொடுத்து,

விஸ்வகர்மா, விஸ்வ பிராமணன்,
க்ஷத்திரியன்,
வைசியன்,
சூத்திரன்,
ஒடுக்கப்பட்ட வகுப்பார்,
பிற்பட்ட வகுப்பார்.

என்பதாக பிரித்துக்காட்டி அதற்கு நேராக எண்ணிக்கைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இவற்றுள் யார் யாரை எந்த எந்த வகுப்பில் சேர்க்கப்பட்டிருக்கின்றது என்பதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால் சூத்திரன் என்பதாக ஒரு வகுப்பு பிரித்துக் காண்பித்திருப்பதானது, சென்னை கவர்ன்மெண்டு பார்ப்பன ஆதிக்கத்தில் மனுதர்ம சாஸ்திர முறைப்படி நடக்கின்றதென்றே கருதவேண்டி இருக்கிறது. இதை நாம் கண்டிக்காமலும் திருத்தாமலும் இருக்க முடியாது. சூத்திரன் என்றால் என்ன என்பதை அரசாங்கம் இன்னும் அறியவில்லை என்று சொல்லுமானால், அதற்கு நமது நாட்டில் ஒரு மாத்திரை நேரமும் இங்கு வேலையில்லை என்றே சொல்லுவோம். அன்றியும் அந்தக் கணக்குகளைப் பிரித்துக்காண்பித்த இலாக்காவாகிய ஸ்தலஸ்தாபன நிருவாகம் ஒரு தமிழ் மகன் கையிலிருக்கும் போதே, இந்நாட்டு தமிழ் மக்களைச் "சூத்திரன்" எனப் பெயர் கொடுத்து அதில் சேர்த்திருப்பதானது கொஞ்சங்கூட பொறுத்துக்கொள்ளக் கூடிய செய்கை அல்லவென்று சொல்லுவதோடு, அவ்விலாக்காத் தலைவருக்கும் சுயமரியாதையில் ஒரு சிறிதும் கவலையில்லாமல் மானமரியாதையை விற்றாவது சம்பளம் பெற்றால் போதும் என்கிற கொள்கை உடையார் என்றே எண்ணவேண்டியிருக்கிறது.

பார்ப்பனரல்லாதார் கட்சி ஆதிக்கத்தின் கீழ் இவ்வுத்தியோகங்கள் நடைபெற்றுவந்த காலங்களில் இச்சூத்திரன் என்னும் பதம் இருக்குமிடம் தெரியாமல் மறைந்து கிடந்தது. பார்ப்பனரல்லாதார் போக்கியதையைக் கெடுக்கக் காத்திருக்கும் பார்ப்பனர்களின் கைக்குழந்தைகளாகிய சில அடிமைப் பார்ப்பனரல்லாதார் கைக்கு இவ்வுத்தியோகங்கள் போனவுடன் 'சூத்திரன்' என்கிற பெயர் சட்டசபை மேஜையின்மேரில் தைரியமாய் தாண்டவமாடத்தொடங்கிவிட்டதுடன், அப்பார்ப்பன அடிமைகளான பார்ப்பனரல்லாத உத்தியோகஸ்தர்களாலேயே அத்தாண்டவம் ஏற்பட்டதென்றே சொல்லவேண்டியிருக்கின்றது இதைப் பார்த்துக்கொண்டு சட்டசபையில் உட்கார்ந்து காற்றுவாங்கிக்கொண்டிருக்க பார்ப்பனரல்லாத மற்ற சட்டசபை அங்கத்தினர்களுக்கும் அவர்களது சுயமரியாதை எங்கே போய் ஒளிந்துகொண்டிருந்தது என்பது நமக்கு விளங்கவில்லை எனவே தமிழ் மக்கள் மானமும் சுயமரியாதையும் எவ்வளவு அற்ப காரியத்திற்கு விற்கப்படுகின்றது என்பதும், அப்படி விற்ற பார்ப்பனரல்லாதார்களிலும் எப்படிப்பட்டவர்கள், எந்த நிலையிலிருப்பவர்கள் பாராயிருக்கின்றார்கள் என்பதும் இதிலிருந்தே அறிந்துகொள்ளலாம். இம்மாதிரி இழிவான பெயர் கொண்டவர்களையாவது ஒரு மகமதியரையோ, ஒரு ஐரோப்பியரையோ அழைத்திருந்தால் இவர்கள் அந்த சட்டசபையின் கதி என்னவாயிருக்கும் என்பதை யோசித்தால் விளங்காமல் போகாது. மகமதியரும் ஐரோப்பியரும் மாத்திரம் என் உலகத்தை ஆளுகிறார்கள் என்பதற்கும், தமிழ் மக்கள் மாத்திரம் எங்கும் அடிமைகளாயிருக்கின்றார்கள் என்பதற்கும் காரணம் தன்மானத்தைவிட வேறு என்னவாக இருக்க வேண்டுமோ என்று கேட்கின்றோம். அத்துடன் சூத்திரன் என்கிற பதம் மிக இழிவானதாக இருக்கின்றது என்றும், இது எங்கும் காணப்படாமல் இருக்க

ச்த்தியாக்கிரகம் முதலியவைகள்கூட செய்யவேண்டும் என்றும் ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கும் காலத்தில், இச்சத்தியாக்கிரகத்திற்கே ஒரு வெடிகுண்டு புறப்பட்டதுபோல் "சூத்திரன்" என்று சர்க்காராலேயே அழைக்கப்படுவதாக ஒரு அறிக்கை சட்டசபையிலிருந்தே வெளிவருவதானால் இச்சூழ்ச்சியின் தன்மையைப்பற்றி என்னவென்று சொல்லுவது என்பது நமக்கு விளங்கவில்லை.

சூத்திரன் என்றால் என்ன பொருள் என்பதைப்பற்றி நாம் சொல்லவேண்டியதில்லை ஆனாலும் பாமர மக்களுக்காவது இப்பெரியார்களின் யோக்கியதை விளங்கட்டும் என்கிற எண்ணத்தின்பேரில் சில குறிப்பிடுகின்றோம். வேதத்திலும் மனுதர்ம சாஸ்திரத்திலும் உள்ளது போலவே குறிக்கின்றோம்.

அதாவது 'சூத்திரன்' என்றால் பக்தியினால் பார்ப்பனனுக்கு வேலை செய்கிறவன், யுத்தத்தில் தோற்று அடிமையானவன், பார்ப்பனனின் வைப்பாட்டி மகன், விலைக்கு வாங்கப்பட்டவன், பாரம்பரியமாய் பார்ப்பனனுக்குத் தொண்டு செய்து வருபவன்" (மனு 8-415).

"இப்படிப் பட்டவனை சூத்திரனுக்கு யோக்கியதை என்னவென்றால், சூத்திரன் பிராமணனுக்கு தொண்டு செய்தாலல்லது மோக்ஷமில்லை. சூத்திரன் பொருள் சம்பாதிக்கக்கூடாது; மீறி சம்பாதித்து வைத்திருந்தால் பிராமணன் அதை உதைத்துப் பிடுங்கிக் கொள்ளலாம்." மனு (10-129) (8-417).

"பிராமணனுடன் சரி சமமாய் சூத்திரன் உட்கார்ந்தால் அவன் குண்டியை அறுத்து ஊரைவிட்டு துரத்திவிட வேண்டியது" மனு 8-281).

"சூத்திரன் காக்கப்படாத (அதாவது தன்னிச்சைப்படியாய் திரிகிற, தானாகவே சம்மதித்த) பிராமண க்ஷத்திரிய வைசிய ஜாதி ஸ்திரீயைப் புணர்ந்தால் பிஜம் ஆண்குறி முதலியவைகளை அடியோடு அறுத்துவிட வேண்டும்; காக்கப்பட்ட ஸ்திரீயைப் புணர்ந்தால் தேகமுழுவதும் சித்திரவதை செய்து வெட்டிவிடுவதுடன் அவனுடைய எல்லாப் பொருள்களையும் பிடுங்கிக் கொள்ள வேண்டும்" மனு(8-374).

'ஆனால் காக்கப்பட்ட சூத்திர கற்புடைய ஸ்திரீயைப் பிராமணர் (வலுவில்) புணர்ந்தால் ஆயிரம் பணம் மாத்திரம் அபராதம் போடவேண்டும்" மனு 8—333

என்பவை போன்றவைகள் 'இந்து' மத வேதத்திலும், மனுதர்ம சாஸ்திரத்திலும் பராசர முதலிய ரிஷிகள் ஸ்மிருதியிலும், புராணங்களிலும் காணப்படும் 'அநீதிகள்' கணக்கு வழக்கில்லை. இப்படிப் பட்ட பொருளையே மதசம்பிரதாயத்தில் 'சூத்திரன்' என்கிற பெயராகக் கொண்டு நம்மை அழைப்பதென்றால், அதை எப்படி சகிக்க முடியும்? அந்தக் சட்டசபையிலாவது இப்பெயர்கள் அரசாங்க சம்பந்தமான எந்த காரியங்களிலும் உபயோகப்படுத்தக்கூடாதென்றும், இப்பெயர்களையும் இதற்கு ஆதாரமான வேதசாஸ்திர புராண முதலிய கதைகளும் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்குப் பாட புத்தகமாக வைக்கக்கூடாதென்றும், ஒரு மசோதா கொண்டு போய் நிறைவேற்றிச் சட்டமாக்கி அமுலில் வரும்படி செய்ய வேண்டும். அந்தப்படி செய்ய நமது சட்டசபை அங்கத்தினர்களுக்கு யோக்கியதை இல்லையானால், அவர்கள் அங்கிருப்பதில் பயனென்ன என்று கேட்கிறோம்?

சட்டசபை ஸ்தானம் நமது சுயமரியாதையைக் காப்பாற்றுவதற்காகவா, அல்லது நமது சுயமரியாதையை விற்று தாலூகா ஜில்லா போர்டு முனிசிபாலிட்டி முதலியவைகளுக்கு அங்கத்தினராகவும் தலைவர்களாகவும் இருந்து வயிறு வளர்ப்பதற்காகவா என்று கேட்கின்றோம். சட்டசபையில் நமக்குக் கடுகளவாவது மரியாதை இருக்குமானால், அதுவும் நமது சுயமரியாதைக்குக் கொஞ்சமாவது உதவாதா என்கிற எண்ணத்தின்பேரில் தான் இருக்கலாமே ஒழிய மற்றபடி பதவிக்கும் சுகத்துக்கும் அல்ல என்றே சொல்லுவோம். எனவே மகாத்மா காந்தியையும் நாம் வெறுத்துத் தள்ளிய காரணமும் இதுவே அல்லாமல் வேறல்ல. அவர் வருணாசிரமத்திற்கு எவ்வளவு பெரிய தந்திர வியாக்கியானம் செய்தாலும், வருணம் என்பதையும், அது பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் எனப்பெயர் கொண்டது என்பதையும், அவர்களுக்குத் தனித்தனி தர்மம் உண்டு என்பதையும், அவரவர்களுக்குண்டான தர்மப்படி அவரவர்கள் நடக்கவேண்டுமென்பதையும், மாற்றி வேறு வியாக்யானம் செய்ய முயலவில்லை என்பதையும் நன்கு உணர்ந்தாய் விட்டது. இனி மகாத்மா இந்தக் கொள்கையுடன் கதரின் மூலமாகவோ வேறு எதன் மூலமாகவோ நம் நாட்டுக்குத் தெருவெல்லாம் பொன் காய்க்கின்ற மரம் உண்டாகும்படி செய்தாலும் கூட அது வெறும வயிற்றுச் சோற்று பிரசாரமாகுமே தவிர ஒரு கடுகளவும் சுயமரியாதைப் பிரசாரமாகாதென்பதே நமது முடிவு. இந்தக் கொடுமையைப் பற்றிச் சர்க்காருக்கும், மந்திரிக்கும், சட்டசபை அங்கத்தினர்களுக்கும் தெரியப்படுத்துவதுடன், நமது நாட்டில் உள்ள ஒவ்வொரு பட்டணங்களிலும், ஒவ்வொரு கிராமங்களிலும் இருக்கும சுத்த இரத்த ஓட்டமுள்ள அதாவது ஒவ்வொரு உண்மையான சூத்திரரல்லாதவர்களுக்கும் ஒரு கூட்டம் போட்டு சூத்திரத் தன்மை என்பது என்ன என்பதை நன்றாய் பொது ஜனங்களுக்கு விளக்கிக்காட்டி ஒரு கண்டனத் தீர்மானம் செய்து சர்க்காருக்கும் சட்டசபை மெம்பர்களுக்கும் உடனே அனுப்புவதுடன், இக்கொடுமையை ஒழிக்கச் செய்யும் சுயமரியாதை சத்தியாக்கிரகத்திற்குத் தொண்டர்களையும் பதிவு செய்து அனுப்பிக் கொடுக்கவேணுமாய்க் கோருகிறோம்.

தீபாவளி! தீபாவளி!!

ஏழைகளுக்கு அணியும் மணியும், பலகாரமும் பக்ஷணமும், அளிக்காவிட்டாலும் சாதாரண உணவும் உடையும் அளித்துக் கதரையாவது தீபாவளியன்று வாங்கியுடுத்துங்கள்.

நாகர்கோவிலில் மகாத்மா வருகை. சாராயக் குத்தகைக்காரரின் விருந்து.

ஐயா! பொன் விளைந்த நாடெனப் புவியோர் புகழ்ந்த புராதன இப்பாரத நாடு தற்காலம், மண்ணும் ஓடும் விளையும் மணற்காடாய், பொய்யும் புலையும் செறிந்த வன்காடாய், சதையின்றி எலும்பும் தோலுமே போர்த்த மனிதப்பிராணிகள் வாழும் சுடுகாடாய்ப்போனதின் காரணந்தானென்னவோ? இந்திய மகா சபையாகிய காங்கிரசோ இன்றும் பதவி மோகத்திலும், உத்தியோக வேட்டையிலும் மூழ்கியிருக்கின்றது.

இவற்றிற்குரிய நிவர்த்தி மார்க்கந்தான் யாது? என்று ஓயாது ஆராய்ச்சி செய்ததின் பயனாக பாரதத் தாயின் அரும் புதல்வரான மகாத்மா காந்தியடிகள், மதுவிலக்கல், தீண்டாமை ஒழித்தல், கதரணிதல் என மும்மந்திரங்களை அருளிச் செய்தனர்.

கும்பகர்ண உறக்கத்தில் மூழ்கியிருந்த நாமவர்களைத் தட்டியெழுப்ப காந்தியடிகளும் இந்திய நாடெங்கும் சுற்றுப்பிரயாணஞ் செய்து குடியைக் கெடுக்கும் குடியை ஒழித்தல் வேண்டுமென்றும், மனிதர் யாவரும் கடவுள் முன்னிலையில் சமமேயென்றும், பொருள்வருவாய் நிமித்தம் கதர் உற்பத்தி செய்யவேண்டுமென்றும், வற்புறுத்தி பிரசாரஞ் செய்துவருகின்றமை யாவரும் அறிந்ததே. இங்ஙனமிருக்க, நாகர்கோவில் காங்கிரஸ் கமிட்டியார் மகாத்மாவின் வருகையை சிறப்பிப்பான் வேண்டி சகல ஏற்பாடுகளும் செவ்வனே செய்தனரினும் குடியைக் கெடுக்கும் குடியையும், போதம் பறிக்கும் கஞ்சா அபினையும், குத்தகையாகப் பிடித்து நாட்டுமக்களைத் துன்பத்துக்குள்ளாக்கும் ஓர் கனவான் வீட்டில் அவ்வுத்தமோத்தமரின் ஜாகையை அமர்த்திக்கொள்ள ஏற்பாடு செய்தது அவர் தம் கொள்கைக்கும் காங்கிரசின் திட்டத்திற்கும் எத்துணை தூரம் பொருத்தமுள்ளது என்பதை இந்நகர கமிட்டியார் அறிந்திலரோ என்றுதான் மனம் வருந்த வேண்டியதாயிருக்கிறது. இடவசதியை உன்னி இத்தலைவர்கள் இங்ஙனம் ஏற்பாடு செய்தாரெனில் இதைவிட மேலான இடவசதியுள்ள பொது ஸ்தாபனங்களும், கவர்ன்மெண்ட் கட்டிடங்களும் இருக்கும்போது இரகசியமாக அத்தனவந்தரின் கட்டிடத்தை தெரிந்தெடுத்துக் கொண்டமையின் இரகசியம் பொது ஜனங்களுக்கு மனதிலாகாமலில்லை. மகாத்மா காந்தியடிகளின் கொள்கைக்கு முற்றும் முரணான சாராயக் குத்தகைக்காரரொருவர் கதர் பண்டுக்கு ஏராளமான நிதி கொடுப்பார் என்ற காரணத்தால் காந்தியடிகளைக் காட்டிக்கொடுப்பது ஆட்சேபிக்கத் தக்க விஷயம் என்பதில் ஐயமுண்டோ? இனியேனும் காங்கிரஸ் கமிட்டியார் பொதுக்காரியங்களில் புகுந்து ஆட்சேபிக்கத் தக்கவிதத்தில் நடந்துகொள்ளாதிருப்பார்களாக.

உண்மையுரைப்போன்.

6ம் பக்கத் தொடர்ச்சி

பசு வாங்கிக்கொடுக்கவேண்டுமாம். ஏனெனில் இந்த இறந்த ஜீவன் நெருப்புஆற்றைமயிர்ப்பாலத்தின் மீது கடந்து மோக்ஷத்திற்குச் செல்ல வேண்டியிருக்கின்றதாம். இறந்த ஜீவன் பாரமான ஜீவன்; நடக்கும்பொழுது மயிர்ப்பாலம் அறுந்து விழுந்து விட்டால் நெருப்பு ஆற்றில் விழுந்து பிசாசாக உலாவ வேண்டி வருமாம். ஆகையால் புரோகிதனுக்கு ஒரு மாடு கொடுக்கவேண்டும் என்று சொல்லுகிறான். ஜீவன் போகும் போதே அறுந்து போகும் அந்த மயிரானது பெரிய மாடு நடந்தால் தாங்குமா? அதோடு நம் தந்தையும் அம்மாட்டு வால்பற்றி தொங்கினால் அந்த மயிர் இரண்டு பேரையும் தாங்குமா என்பதாக கொஞ்சமாவது சிந்திக்கிறோமில்லை. யாராவது சிந்தித்தாலே அதைப்பாவம் என்று சொல்லிவிடுகிறான், மதத்தைப்பற்றியும் சடங்கைப்பற்றியும் நமக்கு கொஞ்சமும் புத்தியில்லை. எவ்வளவு தூரம் நாம் ஏமாற்றப்படுகின்றோம் என்பதை நாம் கொஞ்சமாவது உணர்ந்தோமில்லை. செத்த பிறகும் அவன் சொல்லும் வண்ணம் காலை மடக்கவும், முழங்காலிடவும், மண்டி போடவும், பணங்கொடுக்கவும், பூணூலைமாற்றி போடவும், அவன் சொல்லுகிறபடியெல்லாம் குரங்கு போல் ஆடவும் வேண்டியிருக்கின்றதேயன்றி, இழவுக்கு வந்தவர்களிடத்தில் பேசவுங்கூட ஓய்வில்லை. இறந்து 3-ம் நாள், 4-ம் நாள், 5-ம் நாள், 6-ம் நாள் 16-ம் நாள் கிரியைகள் என்று பணம் பறிப்பதும் மாதம் மாதம கொடுப்பதோடல்லாமல் காத்துக்கொண்டேயிருந்து, வரும் மாதம் தேதி ஆனவுடன் ஒரு வாரம் முன்பே 'உங்கள் அய்யாவுக்கு வருகிற வாரம் திதி. சாமான் சேகரம் செய்து வை' என்கிறான்.

நாம் அதற்காக எல்லா சமையல் சாமான்களும், சாப்பாடு அதிகமாய்விட்டால் அஜீரணத்திற்குச் சுக்கும் மிளகும் கூடவைத்து, மிதியடி குடை பாத்திரம் முதலியவைகளுடன் கொடுப்பதோடு அல்லாமல், அவன் அழுக்குப்படிந்த காலில் நாம் மாத்திரமின்றி நம் அருமை பத்தினியையும் விழும்படி தூண்டி பிறகு அந்தச்சாமான்களை ஆள்வசம் மூட்டைகட்டிக்கொடுத்து வீட்டில் சேர்க்கும்படி சொல்லி அனுப்புகிறோம். இந்தச் சாமான்களை விற்றுச் சீட்டாடுவதுமாகிய இழி தொழிலுக்குப் பயன்படுகிறது. சில, வேசி வீட்டிற்குப் போய்ச் சேருகின்றது. செம்பு, பஞ்சபாத்திரம், குடை, செருப்பு, வேஷ்டி இவைகள் தனக்கு வேண்டியது போக மீதியை ஒன்றுக்குப் பகுதியாய் விற்கிறான். விற்ற பணத்தில் சூதாடுகிறார்கள். 7 ரூபாய்க்கு வாங்கின குடத்தை இரண்டரை ரூபாய்க்கு விற்பான். ஒரு பார்ப்பான் நிலம் வாங்கினால் ஒரு தானியம் தான் அவன் பயிரிட முடியும். ஆனால் நம் வீட்டுத்திதிக்கு வந்தால் எல்லாத் தானியமும் அவனுக்கு விளைந்தால்போன்று எடுத்துக் கொடுக்கிறோம். எனவே நம் வீட்டில் ஒருவர் செத்தால் பார்ப்பானுக்கு சகல சாமானும் விளைகிற ஒரு பூமி வாங்கினதுபோல் ஆகிவிடுகின்றது. குறிப்பிட்ட ஓரிடத்தில் செய்தால் மறுபடியும் அவன் திதியே செய்யவேண்டியதில்லை யென்பான். அப்படிச் செய்துவிட்டால் பிறகு உனக்குத்தான் சக்தியிருக்கிறதே, சக்தியில்லாமல்போனால் தான் அசத சட்டம் பொருந்தும் என்பான். தனக்கே பிண்டம் போட்டுக் கொள்ளவும் செய்வான். செத்தவுடன் மக்களையும் பிண்டம் போடும்படி உயிரை வாங்கிவிடுவான். சடங்கு இப்படி.

இனி மத ஆச்சாரியார்களையும் மத குருக்களையும் சற்று கவனிப்போம். இவர்களால் மக்களுக்குப் பயன் ஒரு சிறிதும் இல்லை. இந்து மதத்தின் போல் சங்கராச்சாரியார், சைவ மடாதிபதி, வைணவ மடாதிபதி முதலிய பலர் இருக்கின்றார்கள். ஒவ்வொருவரும் யானைகளிலும் ஒட்டகங்களிலும் தன் இனத்தாருடன் வருவதும், ஓரிடத்தில் தங்குவதும், அவ்வூரிலுள்ள தங்களினத்தாரைக்கொண்டே சாமியாருக்குப் பாத பூசை பிச்சையென்று விளம்பரம் செய்வதும், ஒரு ரூபாய் ஒரு பவுன் கொடுத்து அவன் காலைக் கழுவின நீரை வாங்கி அருந்துவதும், அந்த ஊரில் கறக்கிறவரையில் அங்கே இருந்த பிறகு வேறு வேறு ஊர்களில் தங்குவதும், நம்மிடம் வாங்கின பணத்தைக் கொண்டே சாமியார் சூத்திரனைப் பார்த்ததற்கு ஒரு பிராயச்சித்தமும் ஒரு முழுக்கும், நிழல் மேல்பட்டதற்கு ஒரு பிராயச்சித்தமும் ஒரு முழுக்கும், நீச்சமொழியாகிய தமிழில் பேசினதற்காக ஒரு பிராயச்சித்தமும் ஒரு முழுக்கும் போடவேண்டியவனாகி விடுகிறான். இம்மாதிரி ஆள்களில் சிலர் உலககுரு என்கிறார்கள். சிலர் குலகுரு என்கிறார்கள். குலகுரு என்பவர் ஓரிடத்திலிருந்து தனது ஆட்களில் ஒரு ஆளை அனுப்பி தான் வந்திருப்பதாக தெரிவிப்பார். சிஷ்யர்கள் மக்களோடும் மனைவியோடும் ஓடோடியும் சென்று அவர்காலில் விழும்படி அவனது மக்களுக்கும் மனைவிக்கும்கட்டளையிட்டு தானும்காலில் விழுவான்.

குலகுரு—உனக்கு எத்தனை குழந்தை என்பான்.

சிஷ்யன்—மூன்று குழந்தைகள்; இரண்டிற்கு விவாகம் ஆயிற்று.

குலகுரு—உன் இரு குமாரன் இருதலைகட்டு, நீ ஒருதலைகட்டு, ஆக மூன்று தலைகட்டு. மூவொன் மூன்று, மூகால் முக்கால் ஆக மூன்றேமுக்காலுக்கு ஒன்றேகால்தான் வைத்திருக்கிறாய் என்ன?

சிஷ்யன்—சாமி அடியேனை மன்னிக்க வேண்டும் என் அறியாமைக்கு அபராதம் 1¼ காணிக்கையும் சேர்த்து வைத்திருக்கிறேன். ஏனென்றால் என் மக்களிருவரும் உத்தியோகம் செய்யவில்லையே.

குரு—உங்கள் தந்தைதானே தலைக்கட்டுக்கு 1¼ கட்டளையென்று எழுதி தந்திருக்கின்றார். இதோ பட்டயம் பார், என்றுசொல்லி பணம் வாங்கிக்கொண்டு, சாமிகள் வீடு சிறிது பழுது பார்க்கவேண்டியிருப்பதால் நீங்கள் வந்து அவைகளை சீக்கிரம் முடித்துக்கொடுங்கள். சாமிகள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார் என்று சொல்லி வேறு ஊருக்கு கொள்ளையடிக்கப்போய் விடுவான். இவன் போன பிறகு யாராவது வந்து சிஷ்யனை உன்னுடைய மதம் என்ன அப்பா, நீ பெரிய நாமம் போட்டுக் கொண்டிருக்கிறாயே என்றால் ஒன்றுமே பதில் சொல்லத் தெரியாமல் விழிப்பான்.

புராணக் கொடுமை.

இராமாயணத்தில் இராமருக்கும் சீதைக்கும் ஒருமுறை கலியாணம் செய்திருந்தால், நாம் ஒவ்வொரு வீட்டுத்திண்ணையிலும் வாரத்திற்கொரு முறை நடத்துகிறோம். வீட்டில் வைத்தால், எவ்வளவு பாவம் செய்திருந்தாலும் எல்லாம் பறந்து போய்விடுவதோடு நமக்கு மோட்சமும் கொடுக்குமென்று கருதியே, சீதா கலியாணம் செய்ய சாஸ்திரி காலில் விழுந்து இரண்டு ஜதை வேட்டியும் தருகிறோம். இராமாயணம், இராம பட்டாபிஷேகம், உற்சவம் செய்வதில் கேட்க கேட்க இன்பமாகத்தானிருக்கிறது. ஆனால் கடைசியில் படித்தால் நம்மை அடிமைகளென்று சொல்லுவதற்கு ஆதாரம் அதில் சொல்லப்பட்டிருக்கிறது. இராமர் அரசாளும் காலத்தில் ஒரு பிராமணக் குழந்தை செத்துப் போனதாகவும், அக்குழந்தையின் தந்தை இராமனையணுகி "இராமா நீ ஆட்சிபுரியும் நன்னாளில் என் குழந்தை எப்படி சாகலாம் என்று கேட்டதாகவும். இதற்கு காரணம் கண்டு பிடிக்க இராமர் மாறுவேடம் பூண்டு நகர் சோதனை செய்ததாகவும், அப்போது ஓரிடத்தில் ஒரு சூத்திரன் சாமியைக் கும்பிட்டுக் கொண்டிருந்ததாகவும், அதைக் கண்ட இராமன் சூத்திரன் சாமியை வணங்கினதினால் 'தான் அப்பார்ப்பனப் பிள்ளை மாண்டதாக கருதி அவனை பாணத்தால் எய்து வீழ்த்தியதும், அப்பார்ப்பனப்பிள்ளை மீண்டும் உயிர் பெற்றதாகவும் எழுதப்பட்டிருக்கின்றது. எனவே ராமாயணப்படி நாம் கடவுளைக் கூட வணங்க உரிமையில்லாதவர்களாயிருக்கிறோம். சுயராஜ்யக் கட்சி பார்ப்பனர் கூட உங்களுக்கு இராம ராஜ்யம் சம்பாதித்துத் தருகிறோம் என்று பேசியிருக்கிறார்கள். அப்படி இராம ராஜ்யம் வந்தால் நமது நிலைமை என்ன? சுவாமி கூட கும்பிடாமல் பார்ப்பானுக்கு அடிமையாயிருப்பது தான் நமது கடமையென்பது விளங்கவில்லையா? தவிர பெரியோர்கள் போனவழியே நாமும் பின்பற்றுவோம் என்கிறவர்கள் மற்ற காரணங்களுக்கு மாத்திரம் ஏன் பெரியோர்கள் போனவழியே நடப்பதில்லையென்றால் பதிலில்லை.

ஒருகாலத்தில் ஆற்றங்கரை ஓரத்திலிருந்து மீன், பாம்பு முதலியவைகளைப் பிடித்து அதைச் சரியாக சுட்டும் சுடாமலும் தின்ற வெள்ளைக்காரர்கள் தற்பொழுது எந்த நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் இப்பொழுது ஆணைப் பெண்ணாக்கவும், பெண்ணை ஆணாக்கவும் செய்கிறார்கள். எங்கேயோயிருந்த ஒரு பொத்தானை அழுத்தினால் எல்லா விளக்குகள் எரிகிறதும், மறுபடியும் அந்தப் பொத்தானை தட்டினால் விளக்குகள் நின்றுவிடுகின்றதும், மணிக்கு 500 மைல் ஆகாயக்கப்பல் பறக்கின்றதும் போன்ற பல தெய்வச் செயல்களையும் செய்துகொண்டு வருகிறார்கள். ஆங்கிலேயரும் பெரியோர் போன வழியே நாமும் போவோமென்று போயிருந்தால் அவர்கள் இப்பொழுதுள்ள உன்னத நிலைமையிலிருக்க முடியுமா? பாவம் செய்பவன் புரோகிதனுக்கு பணம் கொடுத்தால் அந்த பாவம் அவனைவிட்டு நீங்கிவிடும் என்று நினைப்போமானால் மக்களுக்கு மேலும் மேலும் பாவம் செய்ய வழியேற்படும். பாவத்தை விலைக்கு விற்கும் மூட வழக்கத்தை மூட்டைகட்டி வைத்ததால் அவர்கள் சீமை சிறப்புற்று விளங்குகின்றார்கள். நாமும் அப்படியே விளங்கவேண்டுமானால் போலிச்சமயமும் மூட வழக்கமும், குருட்டு நம்பிக்கையும் ஒழிய வேண்டும்.

இப்போது நீங்கள் இதையெல்லாம் கேட்டீர்கள். நாளைக்கு ஏதோ சடங்கு செய்ய வேண்டியதாயிருந்தால் புரோகிதனை அழைத்துத்தான் செய்ய முற்படுவீர்கள். காரணம் கேட்டால் பெண்கள் மீது பழிசுமத்துவீர்கள். அதோடு உம்பெண்களையும் அவன்காலில்விழும்படி தூண்டுவீர்கள். இப்புரோகிதக் கொடுமைகளைப பற்றி நம் பெண்கள் உணர்வார்களாயின் 'ஐயோ நீதான் மதியின்றி காலில் விழுந்ததுமல்லாமல் என்னை விழச் சொன்னாயே' என்று நம்மை இழிவு படுத்துவார்கள். இவற்றையெல்லாம் பெரியோர்களுக்கு என்ன சொல்லியும் பயனில்லை. அவர்களுக்கு சில நொண்டிச் சமாதானங்கள் இருந்து கொண்டேயிருக்கும். இனிமேல் அவர்களை நம்புவதில்பயனில்லை. நான் வாலிபர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் இதுதான். நீங்கள் தான எதிர்காலத்தில் நாட்டை அடிமையிலிருந்து விலக்கப் போகின்றீர்கள். உங்கள் காலத்தில் தான் சுயமரியாதை உதயமாகவேண்டும். நான் உண்மையாய் நினைக்கிறேன் நீங்கள் நினைத்தால் புரோகிதக் கொடுமை தலைகாட்டா தொழியும், நீங்கள் ஆண்பிள்ளைகளானால் அடிமைத்தனத்தையும் மூட நம்பிக்கையையும் ஒழியுங்கள். புரோகிதக் கொடுமைகளுக்கு வழி கொடாதீர்கள். அது தான் உங்களை அடிமையாக்கி இருக்கிறது.

இராமாயணம்
பார்ப்பனப் பிரசாரம்.

(உத்தமர் எழுதுவது.)

"திராவிடனில்" திருவாரூரில் இராமாயணமூலம் "பார்ப்பனப் பிரசாரம்" என்ற தலைப்பிட்டு திருவாளர் வி. எஸ் இராமன் என்றவர்களால் விடுக்கப்பட்டுள்ள ஓர் வேண்டுகோளை ஒவ்வொரு தமிழ் மகனும், தமிழ் மகளும, திராவிடத் தமிழ் இரத்தம் உடம்பினுள்ளோடப்பெற்ற ஒவ்வொருவருமே படித்துச் சிந்திக்க வேண்டுமென்று நாம் விரைந்து கேட்டுக் கொள்ளுகிறோம். ஒரு ஆண்டல்ல, பத்தாண்டல்ல, நூறாண்டல்ல, பல நூற்றாண்டுகளாய் நமது தமிழரது சுயமரியாதை யுணர்ச்சியைக் காற்றிற் பறக்கச்செய்து, நல்லது கெட்டது என்பதைப் பிரித்தறியும் பகுத்தறிவையே மறைத்து, நம்மெல்லோரையும் அடிமை வாழ்வில் வாழ்ந்துவரச் செய்வதற்கு முக்கிய கருவியாக இருந்தது இந்த "இராமாயணப் பிரசாரமே"யாகும். இதையுணர்ந்து ஒப்புக்கொள்ளக்கூடிய நம்மையொத்தோர் பலர் இருக்கின்றனரெனினும் ;இது வரையிலும் அவர்கள் இதைத் தடுக்க முன் வராமலிருந்தது நமது தமிழ் நாட்டின் தவக்குறைவேயாகும். இவ்வாறிருக்க மற்றொருடைய காய்தலையோ, எரிச்சலையோ, பகையையோ பொருட்படுத்தாது இவ்வெச்சரிக்கையைத் துணிந்து வெளியிட முன் வந்த வீரர் திரு. வி. எஸ். இராமன் என்பவர்களை நாம் பெரிதும் பாராட்டுகிறோம்.

நாம் எவ்வாறு கூறினோமென்பது, சில வாண்டுகளுக்கு முன் திரிசிரபுரத்திலிருந்து புலமை வாய்ந்த பண்டிதர் சவரிராயன் அவர்களது தலைமையின்கீழ் வெளியிடப்பட்டுவந்த 'தமிழியன் ஆண்டிக்குயரி' என்ற மாதப் பத்திரிகையின் முதல் தொகுதி 7-வது வெளியீட்டைப் பார்ப்பார்க்கு இனிது விளங்கும். இராமாயணத்தின் உள்ளுறைப்பொருளின் உண்மையை உள்ளவாறே ஒரு தமிழன் அறியக்கிடந்த முறையை பேராசிரியர் திருவனந்தபுரம் சுந்தரம் பிள்ளை அவர்கள் எவ்வளவோ காலமாய் உணர்ந்திருந்தும் அதைத் தன்னுடைய நண்பர்களான ஒரு சிலரிடம்மட்டும்கூறினரேயொழியத்தானே அதை வெளியிடவில்லையென்றும், அவரிறந்தபின் அவ்வாறு அவர் கூறக்கேட்ட நண்பர்களில் ஒருவரான திருவாளர் வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள்ஒருவாறு துணிந்து தன்னையின்னற்படுத்த முடியாதவகையில் ஒரு பீடிகையுமிட்டுக்கொண்டு காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை அவர்களின் கூற்றாக வெளியிட்டாரென்பதுந் தெரியவரும். அப்படி வெளியிடப்பட்டவை மறுக்கமுடியாத உண்மைகளாயிருந்தும் அதையும் மதத்தின் சார்பிலேயும், தெய்வத்தின் சார்பிலேயும் பல பார்ப்பனப் பெரியார் அக்காலத்திலேயே எதிர்த்தார்கள். ஆதலால் சற்று மீறி வெளிப்பட்ட தமிழரின் சுயமரியாதை அச்சுறுத்தல் காரணமாக உடனே அடங்கிவிட்டதென்றே சொல்ல வேண்டும். பழைய மூட நம்பிக்கைகள் மறுபடியும் தலை விரித்தாடிக்கொண்டிருந்தன. இராமாயணம் என்பதினருகே போகக்கூட உண்மைத்தமிழர்பயந்துகொண்டிருந்தனர். இதை ஒருவாறு நமது வைக்கம் வீரர் திரு-நாயக்கரவர்கள் பொங்கித் ததும்பும் சுயமரியாதை பின்னூக்க, உதறித்தள்ளத்துவங்கினர், இரண்டொரு வார்த்தை மறைவாகவும், இராமாயணத்தின் அடிப்படையான ஆரிய தத்துவத்தைத் தாக்கி எழுதினர். இன்னும் வெளிப்படையாக அவரது உட்கருத்துக்களை எடுத்துக்கூறி மக்களைச் சீர்திருத்த இத்துறையில் திரு. நாயக்கர் அவர்கள் இறங்கவில்லை யென்றே கூறி வருந்துகிறோம். ஆகவே இத்தகைய ஒருநிலைமையில் திரு வி,எஸ். இராமன் அவர்கள் துணிந்து இராமாயணப் பிரசாரம், பார்ப்பனப் பிரசாரம், தமிழரை வீழ்த்தி அடிமைபபடுத்த நினைக்கும் சூழ்ச்சிப்பிரசாரம் என்ற உண்மையை யுணர்ந்து அதற்கு அணை கோலுமாறு ஆர்ப்பரித்து அழைக்க முன் வந்ததை நாம் புகழ்ந்து கூறியது மிகையாகாது. அன்பே வடிவான இன்ப விறைவனின்னருளால் அவர் நீடூழி வாழ்க.

இராமாயணத்தினால் விளையும் நன்மைகளை விடத்தமிழர்க்கு விளையும் கேடுகளே அதிகம என் து மறுக்கமுடியாததொன்று இதைக்குறித்து நம் சிற்றறிவிற்கெட்டிய வரையில் பொதுவாக அடுத்தமுறையும்எழுதுவோம.

ஆகையால் இப்பொழுது நடக்கப்போகும் பார்ப்பனரல்லாத வாலிபர் மகாநாட்டிற்கு பெருவாரியாய் வந்து உங்கள் சுயமரியாதைக்கு போராட உடனே இடுப்பைக்கட்டி முன் வாருங்கள்.

பிறகு இத்தீர்மானம் படிக்கப்பட்டது.

நிகழும் 1927 அக்டோபர் மாதம் 16 தேதி சென்னை சித்தாந்தப் பிரகாச சபையின் ஆதரவில் சென்னை பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் கூடிய சென்னைப் பொது மக்கள் கூட்டம் சென்னை சட்ட சபையில் திரு நிறைச் செல்வி டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் அவர்கள் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தை, இந்து சிறுமிகளை சமயத்தின் பேராலும் சாதி வழக்கத்தின் பேராலும் கோயிற்கணிகையரென முத்திரையிடும் வழக்கத்தைத் தடுப்பதற்கு கவர்மெண்டார் கூடிய சீக்கிரத்தில் அதற்கு வேண்டிய சட்டங்களை ஏற்படுத்த வேண்டுமென்று ஆதரிக்கின்றது.

அங்ஙனமே இந்திய சட்ட சபையில் பெண்கள் மணவயதை உயர்த்த வேண்டுமென்றும் அம்மணவயதுக்கு உட்பட்ட பெண்களுக்கு மணமியற்றுவோர் தண்டனைக்குட்பட வேண்டுமென்னும் இந்தியன் பினல் கோட் சட்டச் சீர் திருத்தத்தையும் இக்கூட்டம் ஆதரிக்கின்றது.

திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் பிரேரேபித்தார்.

திருமதி செல்வி அலர்மேலு மங்கைத் தாயார் அம்மாள் அவர்களும, திரு ஜே. என். இராமநாதன் அவர்களும் ஆமோதித்துப் பேசினார்கள்.

ஒரு நிருபர்

நன்கொடை.

திருநெல்வேலி ஜில்லா, பத்தமடை ஸ்ரீ ஆ. மாசானக்கோனார் அவர்கள் 'குடி அரசு'க்கு மூன்று சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுத்து ஒரு ரூபாய் நன்கொடையும் அளித்துள்ளார். அன்னவருககு சுயமரியாதையின் சார்பாக நம மனமார்ந்த வந்தனம.

நன்றி செலுத்துகிறோம்.

சிங்கப்பூர் ஸ்ரீமான்கள் ஜி. எஸ். நாயுடு, கோவிந்தசாமி, வெங்கிடாசலபதி, கோபால் ஆகிய "குடி அரசு" அபிமானிகளின் ஆதரவில் பினாங்கில் ஸ்ரீமான்கள் R. P. S. மூர்த்தி, என். ஜே. ராம், வி. என். கே. சாமி ஆகிய அன்பர்கள் "குடி அரசு" க்கு கீழ்க்கண்ட கனவான்களை சந்தாதாரராகச் சேர்த்துக் கொடுத்திருக்கிறார்கள். இந் நண்பர்களுக்கு நமது மனமார்ந்த நன்றி செலுத்துவதுடன் இன்னும் சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுத்து சுயமரியாதைக்கு உழைக்கும "குடி அரசை" ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஸ்ரீமான்கள்:—

1 R D ராமசாமி பிள்ளை
2 A M V R ராமலிங்கம்
3 K ஒப்பிலிசாமி செட்டியார்
4 K V ராமசாமி செட்டியார்
5 P A முத்துசாமி செட்டியார்
6 S K மகமட் ராவுத்தர்
7 R M N நாகப்ப செட்டியார்
8 K S சாமி பிள்ளை
9 S M மகமட் ஹூசேன் சாயபு
10 ஹூசன ஹூசன் & Co.
11 S முத்தைய நாடார்
12 M மகமட் மைதீன் & Co
13 S E S அப்துல் கரீம் & Co
14 S M N M & Co.
15 K P மகமட்காசிம்அமீன்சாயபு & Co
16 K M S A காதர் மரைக்காயர் & Co
17 S ஐய்யாவு முதலியார்
18 S A காதர் பாட்சா & Co
19 M ஜோசப்
20 A முத்தையா பிள்ளை
21 R ராமசாமி நாயுடு
22 S P தண்டாயுதபாணி
23 Y J ராமகிருஷ்ணன்
24 ஓரியண்டல் ஸ்டோர்
25 M குமாரசாமி & Co

கோவையில் ஓர் கண்டனக்கூட்டம்.

சென்னை சட்டசபையில் கவர்ன்மெண்டுதாப்பில சூத்திரன் என்ற வார்த்தையை உபயோகித்ததைக் கண்டிக்கும் பொருட்டு 20 தேதி இந்து கிருபாகாநிதி கட்டிடத்தில் நகரசபை உபதலைவர் திரு. வி. அருணாசலம் செட்டியாரவர்கள் தலைமையில் ஒரு பெரிய மகாநாடு கூட்டப்பட்டது.

கவர்மெண்டார் 'சூத்திரன்' என்ற வார்த்தையை உபயோகிக்க முன் வந்தது ஏதோ சிலர் சூழ்ச்சியாயிருக்கலாமென்றும், அது பார்ப்பனரல்லாதாருக்கே பெருத்த அவமானத்தையும் வருத்தத்தையும் கொடுக்கக்கூடியதென்றும், பல கனவான்கள் பலமாகக் கண்டித்துப் பேசி,சூத்திரன் என்றபதத்தைச்சேர்த்திருப்பதை பலமாகக் கண்டித்ததுடன் உடனே அந்த வார்த்தையை எடுத்துவிடவேண்டுமென்றும அதற்கு சட்டசபை மெம்பர்கள் தகுந்த முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும் ஒரு தீர்மானமும் ஏக மனதாக நிறைவேற்றினார்கள்.

எஸ். ஏ. கணேசன்.

சுயமரியாதைத் தோற்றம். சாத்திரங்கள் சுயநலச் சட்டங்களே.

அநாகரீகச் சட்டங்கள் நாகரீககாலத்துக்குப் பொருந்துமா?

(சுவாமி சிதம்பரனார் எழுதுகிறார்.)

பண்டைக்கால மக்கள்தான் மிகுந்த அறிவுடையவர்களா யிருந்தார்களென்றும், இக்காலத்து மக்களுக்குப் பண்டைக்காலத்து மக்களுக்கிருந்த அவ்வளவு பேரறிவு கிடையாதென்றும் சிலர் கண்மூடித்தனமாகக் கூறும் உண்மையற்ற உரையை நாம் எப்பொழுதும் நம்புவது கிடையாது. பண்டைக்காலத்தில் மேலான சிறந்த அறிவுடையவர்கள் பலரிருந்தார்களென்பதை நாம் ஒப்புக்கொள்ளுகின்றோம். ஆனால் அறிவு குறைந்தவர்களும், பெரியோர் என்று மதிக்கப்படுவோர்களால் கூறப்படும் எதையும் ஆராயாமல் பின்பற்றும் வழக்கமுடைய மக்களே மிகுதியாக விருந்தார்கள், ஆகையால்தான் அறிவுடைய பண்டைய மக்கள், சாதாரண மக்களையெல்லாம் ஒரு கட்டுப்பாட்டிற்குட்படுத்தி நடக்கும்படியாகவும், சாதாரணமாக, மிருகம், பறவைகளுக்கிருக்கும் சுதந்தரம்கூட இல்லாதவர்களாகவும் செய்துவிட்டார்கள். ஆனால் இக்காலத்தில் அறிவுடைய மக்கள் மிகுதியாக இருப்பதனால், சுயநலத்தோர்களின் பேச்சுக்கும், கட்டளைக்கும் செல்வாக்கில்லாமற் போகின்றது. யாரிடத்திலும் ஒருவித சுயேச்சையான எண்ணம் உதிக்கின்றது. மனித சமூகத்திற் பாபியென்று சில சுயநல வாதிகளால் ஒதுக்கப்பட்ட சாதியில் உள்ள அறிவுடையவர்களும், தமது உரிமையைப் பெற முயல்கின்றனர். மனித சமூகத்தில் உயர்வு தாழ்வு என்றைக்கு எப்படி வந்ததென்று கருதுகின்றார்கள். அமைப்பில் எல்லா மக்களும் ஒருவகையாகத்தானே யிருக்கின்றோம் அங்ஙனமிருக்க ஏன் நம்மைச் சிலர் தாழ்ந்தவர்களாகக் கொள்ளவேண்டும் என்று நினைக்கின்றார்கள். இறுதியில் உயர்ந்த வகுப்பினர் தங்கள் நலத்தின் பொருட்டாகவே தம் சமூகத்தைத் தாழ்ந்த நிலையை அடையும்படி ஆக்கிவிட்டார்களென்பதை அறியும்போது அவர்களுக்கு உயர் வகுப்பார் மேல் ஒருவித வெறுப்பும் கோபமும் உண்டாகின்றது. அவ்வாறு உண்டாவதும் மனித இயற்கைதான். ஆனால் அவற்றைப் பிறர்க்குத் தீங்கு விளைக்கும் அளவுக்கு மீறவிடாமல் தடுத்துத் தமது அடிமை விலங்கை அறுத்துச் சிறையினின்று வெளிப்பட முயலவேண்டுவதே முறைமையாகு மென்பது நமது கருத்து.

இக்காலத்து மக்களில் அறிவுடையவர்கள் மிகுந்திருப்பதால் பண்டைக்காலப் பெரியோர்கள் சிலரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் தளைகளினின்றும் விடுபடுவதற்கு அவர்கள் முயலுகின்றார்கள். அவர்களிலும் எல்லா அறிஞர்களும் அவ்வாறிருக்கின்றார்களென்று கூறுவதற்கு இல்லை. நீண்டகாள் தம்மைச் சூழ்ந்து கொண்டிருந்த மயக்கத்தைத் திடீரென்று அகற்றும ஆற்றலும், அறிவும், அஞ்சாமையும் பெருக அறிஞர்கள் எத்தனையோ பேர் இருக்கின்றார்கள். அவர்களுக்கும், மேகத்தாற் சூழப்பட்ட வானத்தில் விளங்கும் சந்திரனைப் போல் சிறிது சிறிது உண்மை விளங்கினும் அதை வெளியிட்டுக்கூறும் மனோவலிமை வாய்க்காதவர்களாயிருக்கின்றனர். என்ன செய்வது! வழக்கத்தை திடீரென்று மறக்க முடியாதல்லவா? ஆனால் இன்றோ அல்லது நாளையோ இன்னுஞ்சிறிது நேரத்திலோ அவர்களும் உண்மை யுணர்ந்து தைரியத்தோடு முன்வருவார்களென்பது திண்ணம். முற்கால அறிஞர்கள் எந்தச் செய்திகளையும் கடவுள் கூறியதாகப் பாமரமக்களுக்கு போதித்து அவர்களை அடக்கி ஆண்டுவந்தனர். அதற்காகத்தான் பல சாத்திரங்கள் தோன்றியிருக்கின்றன. இக்கால அரசாங்கத்தார் எங்ஙனம் பல சட்டங்களை நிறைவேற்றி மக்களை அதற்குக் கட்டுப்பட்டு நடக்குமாறு செய்கின்றனரோ அதுபோலவே பண்டைக்காலத்தினர் செய்த சுயநலமான கொடுஞ்சட்டங்களே சாத்திரங்களென்பன. ஆனால் அச்சாத்திரங்களாகிய சட்டங்கள் அக்காலத்திற்கு ஏற்றனவாக இருந்தாலுமிருந்திருக்கலாம். பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் செய்த சட்டங்களை இப்பொழுது வழக்கத்திற்குக் கொண்டுவர வேண்டுமானால் அது எவ்வளவு அநாகரீகமாகும். பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் மக்கள் எந்த நாகரீகத்திலிருந்தனர். அப்பொழுது அவர்கள் மனோபாவம் எவ்வாறிருந்தது. இக்காலத்திற்கும் அக்காலத்திற்கும் ஏணிவைத்தாலும் எட்டுமா? அப்படியிருந்தும் அக்காலச்சட்டங்களாகிய சாத்திரங்களின்படி தவறாமல் நடக்க வேண்டுமென்று கூறுவதைபபோல அறிவீனமும் சுய நலமும் என்ன விருக்கின்றது'

அன்றியும் ஒவ்வொரு நாட்டிலும் வழங்கும் சட்டங்களுக்குள் வேற்றுமையிருப்பதும் உண்டு. அதுவும் அந்தந்த நாட்டு இயற்கைக்குப் பொருந்தியதாகவே யிருக்கும். அந்தந்த நாகரீக வளர்ச்சியைப் பொருத்துமிருக்கலாம். உதாரணமாக இங்கிலாந்தில் வழங்கும் சட்டங்களுக்கும் இந்தியாவில் வழங்கும் சட்டங்களுக்கும், ஜெர்மனியில் வழங்கும் சட்டங்களுக்கும், பிரான்சில் வழங்கும் சட்டங்களுக்கும, ஜப்பானில் வழங்கும் சட்டங்களுக்கும் ஒன்றுக்கொன்று எவ்வளவோ வித்தியாசங்க ளிருக்கின்றன. அதைப்போலவே நம் இந்தியாவும தென்னிந்தியா வட இந்தியா என இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. தென்னிந்தியாவின் இயற்கையும், இங்குள்ள மக்களின் நாகரீகமும் வேறு; வட இந்தியாவின் இயற்கையும், அங்குள்ள மக்களின் நாகரீகமும் வேறு. ஆதலால் தென்னிந்திய மக்களுக்கு சட்டங்கள் வேறாகவும, வட இந்தியாவுக்குச் சட்டங்கள் வேறாகவும வழங்கி வந்தன. பிறகாலத்தில் எவ்வாறோ வட இந்திய நாட்டுச் சட்டங்களின்படி தென்னிந்தியர்களும நடக்கத்தொடங்கி தன் மதிப்பிழந்தவராயினா உதாரணமாக வருணாசிரமதாமத்தைப்பற்றிப் பண்டைககாலச் சட்டங்களாகிய தமிழ் நூல்களில் யாண்டும் விரித்துக் கூறப்படவில்லை. இந்த வடநாட்டு ஸ்மிருதி நூல்களிலே மிகுத்துக் கூறப்பட்டிருக்கின்றது. எப்படியோ அது நம் மக்களையும் அடிமைப்படுத்திவிட்டது.

ஆகையால் நாம் இந்தக்கால நிலைக்குத் தகுந்தவாறு நடந்துகொள்ள வேண்டுவது தான் அறிவுடைமையாகும். சத்தியத்துக்கும், அறிவுக்கும் மனச்சாட்சிக்கும், உலக நன்மைக்கும் ஏற்றவழியில் நடந்துகொள்ள வேண்டும். எப்போதோ ஒரு காலத்திற் சட்டங்களாகவிருந்த சாஸ்திர மூட்டைகளை இன்னுங்கட்டிவைத்துக்கொண்டு அழுவது அறிவுடைமை யாகாது. ஆகையால் நாம் சாத்திரங்கள் கூறுகின்றதென்று அஞ்சவேண்டுவதில்லை. நமது மனச்சாக்ஷி ஒன்றிற்கே அஞ்சவேண்டும். அதன்படி நடப்போமாயின் எல்லாவற்றையும் எளிதில் செய்து முடிக்கும் ஆற்றலுடையவராக விளங்குவோமென்பதற்கு ஐயமில்லை. பழைய சாத்திரக்குப்பைகளை யெல்லாம் உதறித்தள்ளிவிட்டு அவைகளிலுள்ள சாரங்களை மட்டும் ஏற்றுக்கொள்ள வேண்டும். சாத்திரங்கள் அனைத்தும கடவுளால் செய்யப்பட்டனவென்பதும், அவற்றை மீறி நடந்தால் கடவுள் தண்டனை கிடைக்குமென்றும் கூறும் நாட்டு மூட நம்பிக்கையை நாட்டைவிட்டகற்றி எல்லோரையும உண்மையுணருமாறு செய்யவேண்டியது சமூக ஊழியர்களின் கடமையாகும்.

இராசிபுரம் தாலூகா காங்கிரஸ் தேர்தலும் பார்ப்பன சங்கராணிகளின் சூழ்ச்சியும்:

1927 வருடம் அக்டோபர் மாதம் 12ம் தேதி சாயந்திரம் 4-30 மணிக்கு ஸ்ரீமான் கெ. காகாத்தினம் செட்டியார் கட்டிடத்தில் ஸ்ரீமான் மு. காவேரி நாயுடு அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் காங்கிரஸ் கமிட்டி கூட்டம் நடைபெற்றது.

கீழ்கண்ட தீர்மானங்கள் ஏக மனதாய் தீர்மானிக்கப்பட்டன.

1 தாலூகா காங்கிரஸ் கமிட்டி 1927—28 ௵ எலெக்ஷன் 20-10-27 தேதி வரையில் அந்தந்த தாலூகாவே நடத்த வேண்டுமென்றும், எலெக்ஷன் விஷயமாய் எவ்வித காரணத்தைக் கொண்டும் ஜில்லா கமிட்டியாராகிலும், மகாண கமிட்டியாராகிலும் பிரவேசிக்கக் கூடாதென்றும், 20—10—27 தேதி வரையில் எலக்ஷன் நடத்தா விட்டால் 20—10—27 தேதிக்கு மேல் ஜில்லா கமிட்டியாகிலும் அல்லது மாகாண கமிட்டியாகிலும் பிரவேசித்து எலக்ஷன் நடத்தவேண்டுமென்று காங்கிரஸ் விதியிருக்க இவ்விதிக்கு விரோதமாக சேலம் ஜில்லா காங்கிரஸ் ஆபீசில் சம்பளத்திற்கு வேலை செய்யும் ஒருவர் 3-10-27 ௳ இராசிபுரத்திற்கு வந்து இரவு 8 மணிக்கு மேல் இத்தாலூகா காங்கிரஸ் அங்கத்தினர்கள் மெஜாரிடியாரின் அபிப்பிராயத்திற்கு விரோதமாகவும் மறை முகமாகவும் ஒரு

கமிட்டி நியமித்துப் போனது காங்கிரஸ் ரூல்படி செல்லத் தகுந்த தல்லவென்றும், இக்கூட்டம் கண்டித்து வருவதுடன் ஜில்லா கமிட்டிக்கும் மாகாண கமிட்டிக்கும் தெரிவித்துக் கொள்வதுடன் இந்த ஜில்லாவில் இதே மாதிரி ஒவ்வொரு தாலூகாவுக்கும் போய் எலக்ஷன் நடத்தி வந்ததைப் பற்றி இந்த கமிட்டி கண்டிப்பாய் கண்டிக்கிறது.

2 ஸ்ரீமான் P சுப்பராய செட்டியார் அவர்கள் பிரசிடெண்டாகவும், ஸ்ரீமான் M. S. P. சுப்பராய செட்டியார் உப அக்கிராசனராகவும், ஸ்ரீமான் ஆர். வி. வெங்கிடசாமி நாயுடு காரியதரிசியாகவும், ஸ்ரீமான் ச. ப. முத்தைய செட்டியார் பொக்கிஷதாரராகவும் நியமிக்கப் பட்டனர்.

நிர்வாக கமிட்டி மெம்பர்களும் ஜில்லா கமிட்டி மெம்பர்களும், மாகாண கமிட்டி மெம்பர்களும் சென்னைக் காங்கிரஸுக்கு மெம்பர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த னோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.

ஆர். வி. வெங்கிடுசாமி நாயுடு,
காரியதரிசி.

3-ம் பக்கத் தொடர்ச்சி

வரவு செலவு கணக்கு தர்மகர்த்தாபேரில். விவசார விடுதியிலுள்ள காரியஸ்தர்களும் விவசாரத்திற்கு வரும் விட புருஷர்களின் தோழர்களும் விவசார ஸ்திரியின் தாசர்களும் கள்ளைக் குடித்து ஆடிப்பாடி ஆனந்தம் கொள்ளுகிறார்கள். கோவிலுக்கு வரும் பக்தகோடிகளை அழைத்துக் கொண்டுவரும் புரோகித பிரோக்கர்களும், குருக்கள் ஆசாரிகள் இவர்களில் சிலரும், இவர்கள் பக்கமிருக்கும் பலரும், கோவிலுக்கு வரும் பணக்காரபக்தர்களை ஏமாற்றி பொருள் பறித்து கள்ளோ கஞ்சாவோ பூஜைதியோ போட்டு கோவிலிலும் விபசார விடுதியிலும் ஆடிப்பாடித்திரிவதையாரும் பார்க்கலாம். கள்ளைக்குடித்து பட்டணக்கரையில் தெருவில் தொந்தரவு கொடுத்தால் டாணாக்காரன் டாணாவிற்கு கொண்டுபோய் மயக்கம் தீருகிறவரையிலும் வைத்திருப்பான். விவசார விடுதியிலும் கோவில் மண்டபத்திலும் நடக்கும் நடனக் கணக்கு டாணாக்காரன் புஸ்தகத்திற்கு வருவதில்லை. விபசார விடுதிக்கு பெண்ணின் சுகத்தை விரும்பி ஒருவன் வந்தால் அதற்கு வேண்டிய பொருளை வாங்கிக்கொண்டு மட்டும் விடுவதில்லை. ஆளைப்பார்த்து பொருள் பேசி அதற்கும் இதற்கும்என்று பணம் பறித்து, பாக்கிக்கு அவன் கைப்பொருளை ஈடாக வாங்கி, மிச்சத்திற்கு ஜாமீன் பொறுப்பு காட்டி சொச்சத்திற்கு மறுநாள்வந்து தருவதாக சத்தியம் வாங்கி, அனுப்புகிறார்கள். இதுபோலவே தீர்த்தயாத்திரை ஸ்தலத்திலும் பெரிய கோவில்களிலும் வரும்பக்தர்களை கோவில் குருக்களும் புரோகிதர்களும் வஞ்சனையால் மோசம செய்து பொருளைப் பறித்து கைப்பொருளெல்லாம் தீர்ந்தவுடன் இவர்கள் காட்டும் பாக்கிக்கு எழுதியும் வாங்குகிறார்கள் அதிகப்பணத்திற்கு சத்தியம் செய்யச் சொல்லுகிறார்கள் ராமேஸ்வரம், காசி, கயா முதலிய இடங்களில் இவை சர்வ சாதாரணம். மதுரை, திருச்செந்தூர், சிதமபரம், சீரங்கம், பழனி முதலிய பெரிய கோவில்களில் அநேக பணக்காரர்களுக்கு கட்டளை ஏற்பட்டிருக்கிறது, ஒரு கோவிலில் சிறிது பக்தி காண்பித்தால் மற்ற கோவில்களில் பக்தர்கள் சம்மதமில்லாமலே குருக்கள் கணக்குப் புஸ்தகத்தில் பதிவாய் விடும். மாதா மாதம பிரசாதம் வந்து விடுமேயொழிய அர்ச்சனையை எந்த சுவாமியும் கண்டிருக்காது. நரமாம்ச பட்சிணிகள் காட்டில் மனிதர்களைக் கண்டால் கொன்று கால் வேறு கை வேறு மண்டை வேறாக பிய்த்துப்பிடுங்கி தின்பது போலவும், கொள்ளைக்கூட்டத்தார் பணம் பண்டம் கொண்டுபோகும் மனிதர்களைக் கண்டால் கருணையில்லாமல் மண்டையடி யடித்து உள்ளதெல்லாம் அபகரித்துக்கொள்ளுவது போலவும், கோவிலுக்கு வரும் வெள்ளை வேஷடிக்காரர்களை சுற்றிக்கொண்டு பொய் கதையாலும் வஞ்சனை பொய் மோசடி முதலியவைகளை பிரதானமாகக்கொண்டு சொல்லுவதொன்று செய்வதொன்றாக நடித்து பணத்தை அபகரிப்பதிலேயே கண்ணாக இருக்கிறார்கள். கோவிலுக்கு வந்து போகும் பக்தர்கள், குருக்கள் கோவில் புரோகிதர்களின் அக்கிரமங்களைக்கண்டு கோவிலையும் புரோகிதர்களையும் திட்டிப் போகிறார்களே அல்லாமல் சுவாமியின் அருள் பெற்றுப்போகிறவர்கள் இல்லவே இல்லை. சுவாமிக்கு வெகு பிரியமாக வைக்கப்படும் சாமானகளெல்லாம் விபசார விடுதியில் தான் பார்க்கலாம். அருமையாகக் கிடைக்கும் புஷ்பங்களை வாங்கி சுவாமிக்கு சாத்திக்கொடுக்கும்படியாக சொன்னால் தீபாராதனையுடன் வரும் தட்டில் அந்த புஷ்பமிருக்காது. அது எங்கே என்று கேட்டால் அது அம்மனுக்கு சாத்தியாய் விட்டது, இந்த புஷபம் சுவாமியும் அம்மனும் பள்ளியறையில் அணிந்திருந்த புஷ்பம் என்று சொல்லுகிறான். இது உங்களைப்போன்ற மடையர்களை ஏமாற்றச்சொல்லும் கதை என்று சொல்லுவதை விட்டு விட்டு, இந்த புஷபம் உங்களைப்போன்ற புண்ணியவான்களுக்குத்தான் கிடைக்குமென்று சொல்லுகிறார்கள். வாங்கிக்கொடுத்த அருமையான புஷ்பம் விபசார விடுதிக்குப் போய்விட்டது. கோவில்களில் சுவாமிக்குப் படைத்து அவர் உண்டு தின்ற மிச்ச பலகார பக்ஷணங்களும் அவர் அணிந்த மிச்ச புஷ்ப சந்தனங்களும் பழனிப் பன்னீரும் விவசார விடுதிக்குத்தான் சொந்தம மட்டையடித்திருநாள், கோலடித்திருநாள் ரவிக்கைத்திருநாள் முதலிய திருநாட்களில் விபசார விடுதிக்கும் சுவாமிக்கும் நெருங்கிய சம்மந்தமுமிருக்கிறது. இதையெல்லாம் உத்தேசித்துதான் விபசார விடுதியில் சுவாமியிருப்பது போலவே கோவிலிலும் இருக்கிறார் என்று சொல்லுவதற்கு ஏது உண்டாகிறது.

பார்ப்பனர்களின் ஆசாரந் தீட்டு.

(திருசிரபுரம் ராமதாசன்)

சுயநலப்புலிகளாகிய பார்ப்பனர்களால் 'சூத்திரர்' என்று அழைக்கப்படும் தமிழ்மக்கள் தீண்டின குளத்து ஜலத்தை ஒருங்கே இறைத்து அதில் ஜனிக்கும் ஊற்று நீரை எடுத்துப்பானஞ் செய்வது மிகு வருத்தமானதால் அது தீட்டலலவெனவும், முகந்து வைத்த குடத்தின் ஜலத்தை அச்சூத்திரர், தீண்டின், அதைக் கொட்டி விட்டு மீண்டும் சுலபத்தில் முகந்து கொள்ளக்கூடுமாதலால், அதை, மாத்திரம தீட்டெனவும் பார்ப்பனர் கூறுகின்றனர். பார்ப்பனர் கூறுகின்ற ஆசாரம அல்லது தீட்டென்பது இது தான்!

ஃ ஃ ஃ

பிரம்மாவின் முகத்தினின்று உதித்ததாகச் சொல்லிக் கொள்ளுகின்ற பார்ப்பனர், தாம கருதிய இடத்திற்குச் செல்ல இருப்புப்பாதை முதலிய ஸ்தானங்களில் (டிக்கெட்டு' சீட்டு வாங்குங்காலையில், அங்ஙனமே செல்லக்கருதிவந்திருக்கும்பறையர் சக்கிலியர் முதலிய ஏனைய வருணத்தவருடன் ஒன்றுசேர்ந்து உட்கார்ந்தும், ஒருவரையொருவர் நெருக்க நெருக்குண்டு ஒருவர் மீதொருவர் விழுந்தும், ஒருவரது சுவாசத்தைமற்றொருவர் சுவாசிப்பதும் தீட்டல்லவாம் சிரமத்துடன் விரைந்து டிக்கெட்டு வாங்கி வண்டியின்மீதுட்கார்ந்தபின் அப்பிராமணர் தம்பக்கம் உட்கார்ந்துள்ள அப்பறையராதி வருணத்தவரை நோக்கி "அடா ஈன ஜாதிப் பயலே கிழாதேயடா! தொடாதேயடா" எனத் தமது ஜாதியினை மேம்படுத்திக்கொள்வதை நாம் பன்முறையும் பார்த்து வருகிறோம். ஆசாரம் அல்லது தீட்டென்பது இது தானும்!

ஃ ஃ ஃ

பார்ப்பனரில் பெரும்பான்மையோர் தான் ஸ்நானஞ்செய்தபின் அங்ஙனம் ஸ்நானஞ் செய்யாதிருக்கும் மற்றவர்களைத் தீண்டலாகா தெனவும், ஒருக்கால் தீண்டின் மீண்டும் ஸ்நானஞ் செய்யவேண்டுமெனவும், அவ்வண்ணம் செய்யாவிடில் தீட்டெனவும் ஏற்படுத்தி ஒழுகுபவர்களே எவர்களினும் இழிந்தோராகிய விலைமாதர் மனைகளுக்குச் சென்று ஸ்நானஞ் செய்யாது அங்கு போஜனம் அருந்துவதும், அக்கீழ் மக்களிடம் சுகித்திருத்தலும் தீட்டல்லவென என்னுகின்றனர். ஆசாரம் அல்லது தீட்டென்பது இதுதான்!

ஃ ஃ ஃ

வண்ணான் வஸ்திரங்களைச் சலவை செய்து கஞ்சிபிட்டு தமது மனைகளுக்குக் கொண்டு வந்தபின் அவ்வண்ணானே மீண்டும் அவற்றைத் தீண்டுவனேல் தீட்டாகிறதாம. ஆசாரம் அல்லது தீட்டென்பது இதுதான்!

ஃ ஃ ஃ

துரைத்தன வைத்தியசாலைகளில் பறையரினுங்கடையரெனக் கருதப்படும் தோட்டிகள் கொண்டுவந்த ஜலத்தில் மிசிரித்துப் பண்படுத்திக் கொடுக்கும் ஔஷதத்தைப் பானஞ்செய்வது அனுச்சார மல்லவாம். அவன் கையால் சுத்த ஜலம் வாங்குவது மாத்திரம அநாசாரமாம். ஆசாரம் அல்லது தீட்டென்பது இதுதான்!

ஃ ஃ ஃ

இங்கிலாந்தினின்று செய்துவரும் மீன் எண்ணெயையும், பர்ரோஸ், பிரான்ஸ் முதலியவை மாட்டின் மாமிசத்தால் செய்தனுப்பும பானங்களையும், கோழி முட்டையைச் சேர்த்து செய்தனுப்பும தின்பண்டங்களையும், பிராந்தி முதலிய லாகிரி வஸ்துக்களையும கொஞ்சமேனும் நெஞ்சு அஞ்சாது அருந்தும் இவர்கள் எந்தவழியில் உயர்ந்தவர்கள்

சூத்திரன் என்று உன்னைச் சொல்லிக் கொள்ளாதே.

சூத்திரன் என்றால் வேசி மகன் என்று பொருள்.

நாலு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழநி சித்தவைத்தியசங்க அமைச்சர்!! தமிழ் சித்தவைத்திய கான்பரன்ஸ்களில் முதல்தர தேவ ஒளஷதங்களென முதல்தர தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!!! முப்பு சேர்ந்த மருந்துகள்.

பழனி. சி. எம். சாமி மகாவீரிய தங்கபஸ்பம்

புச்சிலை மூலிகையினுலேயே நீற்றப்பட்டது. பெரிய யஹானின் முறை அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாக்கும்இல்வாழ்வில் அதியற்புத சுகம் தரும். வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, நீரழிவு, பவுத்திரம், மூலம் க்ஷயம், இருமல் கபக்கட்டு குன்மம் முதலிய சகல வியாதிகளும் தீரும். 48 நாள் பஸ்பம் விலை ரூ. 20. 24 நாளைக்கு ரூ. 10.

நற்சாட்சி:—தங்கள் தங்கபஸ்பம் சாப்பிட்டதில் எனக்கிருந்த வாய்வு, வெட்டை பலக்குறைவு முதலியன நீங்கி அபார தாது புஷ்டி உண்டாயிருக்கிறது. இதன் பெருமையையெழுதமுடியாது இன்னும் மேற்படி தங்கபஸ்பம் ஒரு மண்டலத்திற்கு அனுப்பவும். வி. எம். வாதராஜப் பெருமாள்சாமி கவிராயர் பொள்ளாச்சி.

குருஅப்கே் செந்தூரம்-நீரழிவுக்கு

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிவர்த்தி தேகவெளுப்பை மாற்றி ரத்தவிர்த்தியையும், தேக புஷ்டியையும், தரும். சகல மேகமும் க்ஷய ரோகமும் நீங்கும். தளுக்கற்றது 24 நாள் புட்டி 1-க்கு ரூ, 15 48 நாள் புட்டி 1-க்கு ரூ. 30.

நற்சாட்சி.—நான் சிங்கப்பூரில் நீரழிவினுல் அதிக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது தங்களுடைய குருஅப்ரேக் செந்தூரத்தை அனுபானத்துடன் சாப்பிட்டதில் என் வியாதி பூராவும் சொஸ்தமாயிற்று இது நீரழிவு வியாதிக்கு மிக உயர்ந்த மருந்தாய்தெரிகிறது. எனது சிநேகிதர் ஒருவருக்கு ஒரு புட்டி குருஅப்ரேக் செந்தூரமும் அனுபானமும் வி. பி. யில் அனுப்பகோருகிறேன். கா. முகம்மது அப்துல்காதர் காரைக்கால். 21—12—26.

குருதாளகபஸ்பம்-இருமலுக்கு

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு, இவைகள் எவ்வளவு காலப்பட்டதாயிருந்தாலும் சரி, 9-வித காசமும் அவசியம் தீரும். 48 நாள் பஸ்பம் ரூ. 32. 24 நாளைக்கு ரூபா16.

நற்சாட்சி:— தங்கள் குருதாளகபஸ்பம் ஒரு மண்டலம் சாப்பிட்டதில் இருமல், ரத்த வாந்தி இளைப்புஇவைகள்குணமாயிருக்கிறது ஆர். கந்தையா நேட்டிவ் டாக்டர், பாயிண்டு பீட்ரோ சிலோன் 18—9—25.

எல்லா மருந்துகளுக்கும் வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்

சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்

C.மலையப்பசாமி. நித்தியானந்த வைத்தியசாலை பழனி, S. I.

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:—முருகன் ஏஜன்ஸி43அரமனைக்காரத் தெரு ஜி.டி.சென்னை

‘ஆதி இந்தியர்’

ஹாலந்து அரசாங்க காரியதரிசி அவர்கள் 7—9—27 ல் பத்திரிகைகட்கு பின் வரும் அறிக்கையை விடுத்துள்ளார்:—

“இக்குறையும் இந்தியர்கள் தங்களைப் பொதுமக்கள் ‘கில்லிங்’ (கொலையாளி) என்றழைப்பது இழிவைத் தருகின்றதென்றும், அப்பெயரை மாற்றும்படி உத்திரவு அளிக்க வேண்டுமென்றும் தெரிவித்துக்கொண்டதில், மேன்மைதங்கிய அரசப்பிரதிநிதி அவர்கட்டு யாதொரு ஆட்சேபமில்லாதலால், இனி அவர்களை ‘கில்லிங்’ என்றழைக்கவோ, எழுதவோ கூடாதென்று அறிவிப்பதுடன், அன்னரை ‘ஆர் இந்தியர்’ (ஆதி இந்தியர்) என்றழைக்கவேண்டுமென்று ஆக்ஞாபிக்கிறோம். இவ்விடயத்தில் முன்னர் சோதரர் பலர் முயற்சித்து பலன் கிடைக்கவில்லையாயினும் ‘முயற்சி திருவினையாக்கும்’ என்னும் முதுமொழிக்கிணங்க மீண்டும் இம்முயற்சியிற்றலைப்பட்ட ‘ஐக்கிய இந்திய சங்க’ த்தாரின் விருப்பத்தை நிறைவேற்றிய அரசாங்கத்திற்கு இப்பகுதி இந்தியர்கள் மனமுவந்த வந்தனமளிக்கிறார்கள் என்று டைமடான் டில்லி ஐக்கிய இந்திய சங்க கௌரவ காரியதரிசி அறிவிக்கிறார்.

இனம்! இனம்

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனு இனம்.

எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலேசொல்லியபடி பௌண்டன் பேனுஇனமாய் அனுப்பப்படும். கடியாரம விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras.

மின்சார ரசம்.

வேத அபூர்வமான மருந்து! ஆச்சரியகரமான குணம்!

இதற்கு இயற்கையாக ஒரு வித மின்சார சக்தியுண்டு

உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்கலாம், பத்தியமில்லை. அநுபான மில்லை.

மின்சார ரசம் சகல வியாதிகளுக்கும் ஒரு பெரிய வரப்பிரசாதம் என்று அநுபவ சிந்தாந்தமாகி ஜனங்கள் தேர்ந்தெடுத்து கையாண்டு வரும் அமிர்த சஞ்சீவியாகும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம் மின்சார ரசம் கையிலிருந்து விட்டால் வேறு டாக்டர்களை தேட வேண்டிய அவசியம் இராது. இது இவ்வுலகுக்குஓர் ஒப்புயர்வற்ற பரம ஔஷதமாகும். மனிதன் தலை முதல் கால்வரையில் வரும் சகல வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்ற தேன ஜகத் பிரசித்திபெற்றது. துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம்.

குழந்தைகள் முதல் வயோதிகர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும் பயமின்றி இதை உபயோகிக்கலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில் கிடையாது எவ்வித ஆபத்துக்கும் மின்சார ரசம் உதவும் உலகத்தின் நாலு திசைகளினின்றும்ஆயிரக்கணக்கான நற்சாட்சிப் பத்திரங்கள் வந்துகொண்டிருப்பதே இதற்கு போதிய சான்றாகும் இன்றைக்கே எழுதுங்கள். உங்களை ஆச்சரிய முறச்செய்யும கைகண்ட மருந்து

ஒரு புட்டியின் விலை ரூபா இரண்டே. தபால் சார்ஜ் வேறு

விலாசம்:—மின்சாரரசம் கம்பெனி லிமிடெட், சேலம்

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916ல் ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும் தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்

மதராஸ் தெனனிந்தியா மோட்டார் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், மைலாப்பூர்-மதராஸ்.

கடை வெள்ளிக்கடை

தீபாவளி! பண்டிகை தீபாவளி!!

வெள்ளி நகைகள்.

எங்கள் சொந்த பார்வையில் தயார் செய்யப்படும் சொக்க வெள்ளி தண்டை, கொலுசு, செயின், அரைக்கொடி, கெவ்காதரக் கொடி, பீலி வகையறுக்களும் இமிடேசன் சிகப்பு கம்மல், கடுக்கன், தோடு வகையறுக்களும் அசல்பட்டு ஜரிகை பேட்டு வேலையான பட்டு லேஞ்சுகளும், வெண்பட்டுவகையறுக்களும் இமிடேசன் பட்டு சேலை, ரவிக்கை, டாவினி 1, 2, 3 ரூ. லேஞ்சுகளும், இன்னும் பல தினுசுகளும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு விலை குறைத்து இருக்கிறோம். வேண்டியதற்கு ஆர்டர் எழுதினால் உடனுக்குடன் வி. பி. யில் அனுப்பி வைக்கிறோம். விபரம் வேண்டுவோர் விலாசம் தெரிவித்தால் கேட்லாக் இனமாய் அனுப்பப்படும்.

விலாசம்,

தொ. வெ. சென்னி செட்டி & சன்ஸ்

சருப் & ஜவுளி வியாபாரம்

குகை, சேலம். (S. India)

தந்தி விலாசம் "சராப்" சேலம்

கதர்ப் பத்திரிகைக்கு

வருட சந்தா ஒரு ரூபாய் மாத்திரம் அல்லது 8000 கஜம் நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டு இலாகாவாகியவர்களால் மாதம் இருமுறை கதரைப்பற்றி மாத்திரம் பிரசுரிக்கப்படும் எட்டுப் பக்கங்களடங்கிய

"கதர் நூல்"

என்ற கதர் பத்திரிகையின் வருட சந்தா ஏழை ஜனங்களின் உபயோகத்தை முன்னிட்டு ஒரு ரூபாய் அல்லது 8000 கஜம் நூல் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. சந்தாவை முன்னதாகவே மணியார்டர் அல்லது ஸ்டாம்பு மூலமாக அனுப்பவேண்டும். பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை.

அகில இந்தியாவிலும் விசேஷமாகத் தமிழ் நாட்டிலும் கதரியக்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றி எல்லாவிவரங்களும் கதரைப்பற்றிய கதர் பக்தர்களால் எழுதப்பட்ட விஷயம், கதை, கவிதை முதலியவைகளும் கதர் நூலில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. கதரியக்கத்தில் பக்தியுள்ளவர்கள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து வேண்டிய உதவிபுரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்,

சர்க்கா சங்கம், ஈரோடு.

கதரன்பர்களுக்கு

வேண்டுகோள்.

வரும் தீபாவளியன்று கதரணிவது கடமையல்லவா, அன்றைய தினம் முக்கியமாக கதர் பனியனாவது அணியவேண்டும். நம்மிடம் உறுதியான தும் சீக்கிரம் உழைக்கக்கூடியதுமான சுத்த கதர் பனியன்கள் கிடைக்கும்.

விலை டஜன் 1-க்கு

28 இஞ்சு 7-14-0 30 இஞ்சு 8-4-0
32 இஞ்சு 8-10-0 34 இஞ்சு 9-0-0.

உடனே வேண்டிய பனியன்களுக்கு ஆர்டர் செய்யுங்கள். இன்னும் மற்ற எல்லா விதமான கதர் ஜவுளி தினுசுகளும் கிடைக்கும். விலை விபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

M. V. கருப்பண்ணசெட்டியார்,

திருப்பூர்,

(தென் இந்தியா.

கணித சோதிடம்

பாரித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

நே. ஆறுமுகம் செட்டி,

முதலியார் பேட்டை, புதுச்சேரி

அநேக காட்சிகளில், தங்க, வெள்ளி,

மெடல் பெற்ற

விதைகள், செடிகள்.

3-வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 3 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், அலங்காரச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சு. கேட்லாக் இனாம். இங்கிலீஷ் காய்கறி, புஷ்ப விதைகள் :—

20 சாம்பிள் பாக்கெட் ரூ. 2—0—0
10 ,, ,, ரூ. 1—4—0
நாட்டுக் காய்கறி 20 ரூ. 2—8—0

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,

ஹெட்டர்சரி தோட்டம், சேலம்.

பெட்ரோமாக்ஸ் லைட்

லைட்கள், மாண்டில், டூம், தனித்தனி சாமான்யாவும் விலையமாய் கிடைக்கும். கேட்லாக் இனாம்

லைன் கம்பெனி, தஞ்சாவூர்

கதர் வேண்டுமா?

சர்க்கா சங்க அத்தாட்சி பெற்ற சுத்தக்கதர் தமிழ் நாட்டுத் தலைவர்கள் நாயக்கர் நாயுடு அவர்களால் ஆதரிக்கப்பெறும்

லக்ஷ்மி குடி நூல் கதர் சாலை

தயாரிக்கும் கதரையே

பிராமணரல்லாதார்களே ஆதரியுங்கள்.

பிராமணரல்லாதார் முதலைக்கொண்டு முயற்சியைக்கொண்டு அவர்கள் நன்மைக்காக உழைப்பது.

உடனே முன் பணத்துடன் ஆர்டர் செய்யுங்கள்.

தபால், ரயில், கப்பல் மூலம், நிட்டு சரக்கு, நியாயமான விலைக்கு அனுப்பிவைக்கப்பெறும்.

விலாசம் :—

லக்ஷ்மி குடி நூல் கதர் சாலை,

(ஸ்டோர்) ஈரோடு.

ஆரூடம்:—தர்ம நியாயமான கேள்விகளுக்கு விடைகளெழுதி அனுப்ப ரூ. 1. மேற்கொண்டு கேள்வி 1-க்கு அணா 4. தபால் செலவு வேறு. இதற்கு முன்பணம் தபால் செலவுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

வி. எஸ். அய்யர், சுப்பிரமண்ய உபாசி,

பழனி Palni P. O. (S. I.)

"குடி அரசு" நிருபர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

நிருபர்கள் "குடி அரசு"ப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய கட்டுரைகளையும் செய்திகளையும் சுருக்கமாகவும், தெளிவாகவும், காகிதத்தின் ஒரு பக்கத்தில், வரிகளுக்கு இடையில் குறைந்தது அரை அங்குல இடம்விட்டு எழுதியனுப்புவதுடன் தங்கள் முழுவிலாசத்தையும் தெரியப்படுத்த வேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம். பிரசுரிக்கப்படாத விஷயங்கள் திருப்பி அனுப்பப்படமாட்டா.

மானேஜர்,

"குடி அரசு"

"அறிவு விளக்கம்"

ஓர் மாதாந்திரப் பத்திரிகை

வருட சந்தா தபாற்கூலி உள்பட 6 அணா

மாதிரிப்பிரதி இனாம்,

அறிவுவிளக்கம் ஆபீஸ்

உடுமலைப்பேட்டை.

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.